# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 236 | சனி, மே 27, 2023 | 14 பக்கம்





## மகாவலி “ஜே” வலய பிரகடனம்! பின்னணியில் ரகசியத் திட்டம்!!

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராஜா ரவிகரன் செவ்வி



## 19 ஆண்டுகள் கடந்தும் கொலையாளிகள் சுதந்திரமாக வெளியில் நடமாடுகின்றனர்

## நீதி மறுக்கப்பட்ட சமூகமாக ஊடகர்கள்

——— சசி புண்ணியமூர்த்தி

## தமிழர்களையும், முஸ்லீம்களையும் பிரித்தாளும் சதி 1990இல் ஆர்.பிரமதாசா ஆரம்பித்தார்.!



பாகம் 1

——— பா.அரியநேத்திரன்




© 2023 இலக்கு இணையம்

# இலங்கையில் அணு மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்க தயார்

## ரஷ்ய தூதுவர்

இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கினால், நாட்டில் அணு மின் உற்பத்தி நிலையத்தை (Nuclear Power Plant) நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ள தமது நாடு தயாராகவுள்ளதாக இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ ட்விட்டர்தளத்தில் இது தொடர்பில் பதிவிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கையின் எரிசக்தி அமைச் சர் உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி யதாகவும்



அந்த ட்விட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

110 மெகாவாட் அணு மின் உற்பத்தி நிலையத்தை இலங்கையில் ஸ்தாபிப்பது தொடர்பில்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# இலங்கையில் ஊழல் மோசடிகள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை – அமெரிக்கா

சிறந்த ஆட்சி நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கும் ஊழல் மோசடிகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் மேலும் பல்வேறு மறுசீரமைப்புக்களை இலங்கை மேற்கொள்ள வேண்டியிருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிறுவப்பட்டுள்ள அமெரிக்க வர்த்தகப் பேரவையின் வருடாந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், "இந்த வருடம் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இருதரப்புத் தொடர்புகள் ஆரம்பமாகி 75 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன.

இவ்வேளையில் அமெரிக்காவும் இலங்கையில் இயங்கிவரும் அமெரிக்க வர்த்தகப்பேரவையும் இலங்கை பொருளாதாரத்தின்மீது

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# பிரித்தானியாவுக்கு வரும் மாணவர்கள் மீது அதிக கட்டுப்பாடுகள்

பிரித்தானியாவுக்கு கல்விகற்பதற்கு வரும் ஐரோப்பியர்கள் அல்லாத மாணவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களை அழைத்து வருவதை பிரித்தானியா அரசு கடந்த செவ்வாய்க்கிழமை (23) முதல் தடை செய்துள்ளது.

கடந்த வருடம் பிரித்தானியாவுக்குள் மேலதிகமாக குடிபெயர்ந்தவர்களின் எண்ணிக்கை ஏறத்தாள 700,000 ஆக உயர்ந்துள்ளதை தொடர்ந்து பிரித்தானியா இந்த முடிவை அறிவித்துள்ளது.

எனினும் மேற்படிப்புக்காக



அல்லது ஆய்வுக் கற்கை நெறிக்காக வரும் மாணவர்களுக்கு விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மாணவர்களுக்கு வழங்கப்படும் நுளைவு அனுமதியை வேலைக்கான நுளைவு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# புதிய நாடாளுமன்றத்தை மோடி திறந்து வைப்பதற்கு தீவிர எதிர்ப்பு



இந்திய தலைநகர் புதுடில்லியில் அமைக்கப்பட்டுள்ள புதிய நாடாளுமன்ற தொகுதியை இந்திய பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைப்பதற்கு எதிராக 19 எதிர்க்கட்சிகள் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

இந்த நடவடிக்கை மூலம் இந்திய குடியரசுத் தலைவர் ரோபதி முர்முவை மோடி புறக்கணித்துள்ளதாக அவை குற்றம் சுமத்தியுள்ளன. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை(28) இந்திய நாடாளுமன்றத்தின் புதிய வளாகம் திறக்கப்படவுள்ளது.

புதிய கட்டிடத்தை பழங்குடியை சேர்ந்த முதலாவது குடியரசுத்தலைவர் திறந்துவைப்பதே பொருத்தமானது ஆனால் அதனை அரசியல் காரணங்களுக்காக மோடி தடுத்துள்ளதாகவும், இந்த நிகழ்வை கூட்டாக புறக்கணிக்கப்போவதாகவும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# உக்ரைனின் முப்படைத் தளபதி படுகாயம்



ரஸ்யா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் சிக்கி உக்ரைனின் முப்படை தளபதியான ஜெனரல் வலெரி சலுஸ்னி படுகாயமடைந்துள்ளதாக ஆர்.ஐ.ஏ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

படுகாயமடைந்த அவர் வெளிநாடு ஒன்றிற்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு அங்கு இறந்ததாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிக்கின்றபோதும், தலையில் படுகாயமடைந்தசலுஸ்னி மீண்டும் படையினரை வழிநடத்த முடியாத அளவுக்கு காயமடைந்துள்ளதாக ஆர்.ஐ.ஏ நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் கேர்சன் பகுதியில் உக்ரைன் மற்றும் நேட்டோ படை அதிகாரிகள் ஒன்று கூடிய கட்டிடத்தின் மீது ரஸ்யா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் பல அதிகாரிகள் கொல்லப்பட்டதுடன், உக்ரைனின் கட்டளை அதிகாரி படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


அண்மைக்காலமாக சலுஸ்னி பொதுமக்கள் முன்னிலையில் தோன்றாததும் இந்த தகவலை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. அண்மையில் பிரித்தானியாவின் பாதுகாப்பு அமைச்சர் பென் வலஸ் உக்ரைன் சென்றபோதும் பிரதம கட்டளை அதிகாரி அவரை சந்திக்கவில்லை.

இதனிடையே, கிழக்கு உக்ரைன் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் தான் படுகாயமடைந்து உயிர் தப்பியதாகவும், இதயத்திற்கு அண்மையாக வெடிபொருள் துகள்கள் தற்போதும் இருப்பதாகவும் உக்ரைனின் புலனாய்வுத்துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

# ஆசியாவுக்குள் நேட்டோ வருவதை எதிர்க்கும் சீனா

அமெரிக்கா தலைமையிலான வட அத்திலாந்திக் பாதுகாப்பு கூட்டமைப்பு எனப்படும் நேட்டோ அமைப்பு வட அத்திலாந்திக் சமுத்திரத்தின் எல்லைகளுடன் நிற்பதே நல்லது அது தனது எல்லைகளை விரிவுபடுத்துவதை சீனா எதிர்க்கும் என சீனா கடந்த புதன்கிழமை (24) தெரிவித்துள்ளது.

யப்பானில் நேட்டோ தனது அலுவலகத்தை திறக்கும் முயற்சிகளை எடுத்து வருகின்றது. ஆனால் யப்பான் இந்த நடவடிக்கையில் பெறுப்புணர்வுடன் செயற்படும் என நம்புகின்றோம். ஆசிய




பசுபிக் பிராந்தியத்தில் மோதல்கள் இடம்பெறுவதை யப்பான் தவிர்க்க வேண்டும் என சீனாவின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

நேட்டோ ஆசியாவுக்குள் ஆளுமை செலுத்தக் கூடாது. அது தனது பூகோள எல்லைகளை விரிவுபடுத்தக் கூடாது. யப்பானின்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அமெரிக்காவை தரமிறக்கும் பிற்ஸ் நிதி நிறுவனம்

அமெரிக்காவின் கடன் பெறும் எல்லையை உயர்த்தும் பேச்சுக்கள் இரு பெரும் கட்சிகளுக்கு இடையில் இடம் பெற்றுவரும் நிலையில் அமெரிக்காவை கண்காணிக்கப்பட்டநிதி தரமிறக்கலுக்கு உட்படுத்த பிற்ஸ் எனப்படும் நிதி நிறுவனம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



அமெரிக்காவின் கடன் பெறும் எல்லை 31 றில்லியன்களை எட்டியுள்ளது. ஆனால் செலவீனங்கள் அதிகரித்து வருவதால் தற்போது அமெரிக்கா தனது கட்டுப்பணங்களை செலுத்துவதற்குநிதி இல்லாது நெருக்கடியை சந்தித்துள்ளது. 57 பில்லியன் டொலர்களே கையிருப்பில் உள்ளதாக அமெரிக்காவின் திறைசேரி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கும், நாடாளுமன்ற பேச்சாளர் மக்கதிக்கும் இடையிலான பேச்சுக்கள் இணக்கப்பாடு எட்டாததால் அமெரிக்கா பொருளாதார சரிவை சந்திக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் ஏஏஏ என்ற தரத்தில் இருந்து அமெரிக்காவின் நிதி தகுதி தரமிறக்கப்படலாம் என பிற்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் கடன்பெறும் தொகையை அதிகரிக்கும் முடிவு எதிர்வரும் 1 ஆம் நாளுக்கு முன்னர் எட்டப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

## வடக்கில் 37 கிராம சேவகர் பிரிவுகளை ஒன்றிணைத்து மகாவலி "ஜே" வலயமாக அறிவிக்க தீர்மானம்

### சார்ள்ஸ் எம்.பி கண்டனம்

*வடக்கு மாகாணத்தில் உள்ள 37 கிராம சேவகர் பிரிவுகளை ஒன்றிணைத்து மகாவலி ஜே வலயமாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை தீர்மானித்துள்ளமை வன்மையாக கண்டிக்கத்தக்கது. சிங்கள குடி பரம்பலை விரிவுப்படுத் தும்.*

*1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வெளியிடப்பட்ட வர்த்தமானி மீள்பரிசீலனை செய்யப்படும் என குறிப்பிடும் ஜனாதிபதி மகாவலி அதிகார சபையின் செயற்பாட்டை ஏன் கவனத்தில் கொள்ளவில்லை.*

*இராணுவம், மகாவலி அதிகார சபை உட்பட அரச திணைக்களங்கள் தமிழர்களுக்கு எதிராகவே செயற்படுகிறது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.*

*பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) இடம் பெற்ற நிதி ஒழுங்குப்படுத்தல் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில்.*

*2007 ஆம் ஆண்டு மகாவலி அதிகார சபையின் எல்வலயத்தில்தமிழர்களுக்கு சொந்தமானகாணிகள் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தென்னிலங்கை சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மகாவலி அதிகார சபை ஊடாக முன்னெடுக்கப்படும் சிங்கள குடியமர்வு செயற்பாடுகளை பாராளுமன்றத்தின் ஊடாக சுட்டிக் காட்டியுள்ளோம்.*

*மகாவலி எல் வலயம் மீள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட வேண்டும், மகாவலி அதிகார சபை காணிகள் பிரதேச சபைக்கு பொறுப்பாக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம். 1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களம் வெளியிட்ட வர்த்தமானிகளை மீள் பரிசீலனை செய்யு மாறு ஜனாதிபதி உரிய அமைச்சுகளுக்கு பணிப்புரை விடுத்தார்.*

*ஆனால் தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகளை புதிதாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. சிங்கள பரம்பலை விரிவுப்படுத்தும் செயற்பாடுகளில் மகாவலி அதிகார சபை முன்னெடுக்கிறது. இவற்றை மகாவலி அதிகார சபை கைவிட வேண்டும்.*

*மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள அம்பாள் புரம், கரும்புள்ளியான், கொள்ளிவிலாங்குளம், கொம்புமுறிப்பு, நெட்டாங்கண்டல், ஒட்டறுத்தகுளம், பாலிநகர், பாண்டியன்குளம், பொன்னகர், பூவரசம் குளம், செல்வபுரம், சிராட்டிக்குளம், சிவபுரம், வன்னிவிலாங்குளம், விநாயகபுரம், ஆகிய 15 கிராம அலுவலர் பிரிவுகளையும், அதேபோல் அனிச்சங்குளம், பாரதிநகர், புகழேந்திநகர், திருநகர், யோகபுரம் மத்தி, யோகபுரம் கிழக்கு ஆகிய 07 கிராம அலுவலர் பிரிவுகளையும், மாந்தை மேற்கில் உள்ள பாலியாறு, அந்தோணியார்புரம், ஆத்தி மோட்டை, இலுப்பக்கடவை, கள்ளியடி, கூறாய், கோயிற்குளம், காயாநகர், பெரியமடு ஈஸ்ட், பெரியமடு வெஸ்ட், பல்லமடு, வெடுத்தல்மடு ஈஸ்ட், நோர்த், உள்ளடங்களாக 15 கிராம சேகவர் பிரிவுகளையும் இணைத்து 37 கிராம அலுவலர் பிரிவுகளையும் ஒன்றிணைந்து மகாவலி ஜே வலயமாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.*

*1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிலங்கள் உரிய தரப்பினருக்கு கையளிக்கப்படும் என குறிப்பிடும் ஜனாதிபதி மகாவலி அதிகார சபையின் இந்த செயற்பாட்டை*

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் தவறால் இறைமை மீதான இருமுனைத்தாக்குதல்கள்

ஈழத்தமிழர்கள் தங்கள் தாயகம் மீது கொண்டிருக்கும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலான தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட இறைமையை ஒடுக்கி, ஒரே நாடு சிங்கள நாடு, ஒரே சட்டம் பௌத்த ஆகமச் சட்டம், என்பதை நடைமுறைப்படுத்த இருமுனைத்தாக்குதல்களை இன்றைய ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான சிறிலங்கா அரசாங்கம் ஈழத்தமிழர்களின் இறைமை மேல் வேகப்படுத்தி வருகிறது.

ஈழத்தமிழர்களின் இறைமை மீதான முதலாவது தாக்குதல் ஈழத்தமிழரின் தாயகப்பகுதிகளில் பௌத்த மயமாக்கல், சிங்கள மயமாக்க்ல் வழி நிலத்தை ஆக்கிரமித்து மக்களுக்கு மண்ணின் மேலுள்ள பயன்பாட்டு அதிகாரத்தை ஆக்கிரமித்து, ஒடுக்குவது என்பதாக அமைகிறது. நிலப் பயன்பாட்டு அதிகாரமே 'மக்கள் இறைமை' என்பதால் நிலத்தை ஆக்கிரமித்து அவர்களது இறைமையை ஒடுக்கி அவர்களை அரசற்ற தேசஇனமாக்கி அடிமைப்படுத்துவது சிறிலங்காவின் இத்தாக்குதலின் இலக்கு. இதற்கான ஈழத்தமிழர்களின் விருப்பு என்பதை மூத்த ஈழத்தமிழ் அரசியல்வாதியான சம்பந்தன் அவர்கள் சிங்கக் கொடியைத் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்து அனைத்துலகப் பொறிமுறையை ஏற்க மறுத்து உள்ளகப் பொறிமுறையைத் தோற்றுவித்ததின் மூலம் மூன்று தசாப்பதங்களின் பின்னர் சிறிலங்கா பெற்றுக் கொண்டது.

இந்நிலையில் நில அபகரிப்பு மூலம் ஈழத்தமிழர் இறைமையை அபகரிப்பதற்கு மிகச்சிறந்த உதாரணமாகத் தையிட்டியில் 15 தமிழர்களுக்குச் சொந்தமான நிலத்தில் புத்தவிகாரையமைத்து அதனைப் பாதிப்புற்ற மக்களுடன் இணைந்து சனநாயக வழிகளில் எதிர்த்து அமைதிப் போராட்டம் நடாத்திய ஈழத்தமிழர்களின் இறைமையாளரான பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அவர்களைக் காரணமின்றிக் கைது செய்து அவருடன் 21 போராட்ட மக்களையும் காரணமின்றிக் கைது செய்த நிகழ்வு பாராளுமன்ற வாரத்திலேயே நடத்தப்பெற்று சிறிலங்கா எந்த அளவுக்குப் பாராளுமன்ற முறைமைக்கு மதிப்பளிக்கிறது என்பதை மீளவும் நிரூபித்துள்ளது.அதே வேளை மக்களின் சனநாயக எதிர்ப்பு எதனையும் பொருட்படுத்தாது, படைபலப் பயன்பாட்டின் பின்னணியில் தையிட்டிப் புத்த விகாரை வழிபாட்டுக்குத் திறக்கப்பட்டு பௌத்தர்களோ சிங்களவர்களோ இல்லாத அப்பகுதியில் பௌத்த மயமாக்கல் செயற்திட்டமொன்று சிறிலங்காவின் இன்றைய அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறே அரசின் சிங்கள மயமாக்கலுக்கு இவ்வார உதாரணமாக மகாவலி கங்கையை வடக்கே திரும்பும் முயற்சி என்ற பெயரில் நெடுங்கேணிப் பகுதியில் சீனாவின் சீனித் தொழிற்சாலையை தைவான் முதலீட்டாளர்கள் மூலம் நிறுவி தென்னிந்தியப்பரப்பில் இந்தியாவின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் அச்சுறுத்தலை தோற்றுவிக்கும் ரணில் அதே வேளையில் கரும்புச் செய்கைக்கு என ஆயிரம் ஏக்கர் தமிழர்களின் நிலத்தை மகாவலித் திட்டச்சபை ஆக்கிரமிக்க "இது எனது உத்தரவு" என்ற ஜனாதிபதியின் விசேட நிறைவேற்று அதிகார உத்தரவின் மூலம் முள்ளிவாய்க்கால் தமிழின நினைவேந்தலின் 14 வது ஆண்டு அன்றே தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கலந்து கொண்ட மெய்நிகர் கூட்டத்தின் வழி நடைமுறைப்படுத்தியது அமைகிறது. அத்துடன் இனிமேல் சிறிலங்காவில் செய்யப்படும் எந்த முதலீட்டையும் பாராளுமன்றத்தின் தீர்மானத்தின் மூலம் அல்லாது வேறு எந்த நடவடிக்கையாலும் நீதிமன்றத் தீர்ப்புக்கள் உட்பட மாற்ற இயலாது என்கிற சட்டத் திருத்தத்தைச் செய்வதன் மூலம் சட்டத்தின் ஆட்சி சட்டத்தின் முன் அனைவரும் சமம் சட்டத்தின் வழி நீதி என்பன அரசியலில் மட்டுமல்ல பொருளியியலிலும் இல்லாத நாடாகச் சிறிலங்காவை ரணில் அரசு மாற்றியுள்ளது. இதனால் சீனித்தொழிற்சாலைத் திட்டமும் ஈழத்தமிழர்களின் நில அபகரிப்பும் சிங்களக் குடியேற்றமும் என்னும் மூவிதத் தன்மைகள் ஒருங்கிணைந்த இந்தத் திட்டத்தை இதனால் எதிர்காலத்தில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய இந்தியாவாலும் தடுக்க முடியாத ஒன்றாகவே தொடரும். இதுகுறித்து இத்துறையில் அறிவும் அனுபமும் ஆற்றலுமுள்ள முன்னாள் வடமாகாணசபை விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் அவர்கள் இந்த கரும்புச் செய்கை முயற்சி மக்களது குடித்தொகை வாழ்வியல் நிலைகளை மட்டுமல்ல மண்ணின் வளத்தையும் கரும்பு அதிகளவில் நீரை உறிஞ்சி வளரும் பயிர் என்ற வகையில் அழிக்கும் என்ற எச்சரிக்கையையும் விடுத்துள்ளார். கூடவே சிறிலங்காவின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்த 'ஜே' இலக்க மகாவலி நீர்ப்பயன்பாட்டு திட்டம் என்பது நீர்வளத்தையும் தராது மனிதவளத்தையும் மண்ணின் வளத்தையும் இல்லாதொழித்துச் சிங்களப் படையினர்க்கான நிரந்தரக் குடியேற்றமாக மாறும் என்ற எச்சரிப்புகக்ளை விடுத்துள்ளனர். ஆயினும் சிறிலங்கா பௌத்த மகாசங்கத்தினரையே நாட்டின் தீர்மானமெடுக்கும் இறைமையின் மீயுயர் மையமாக அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை மூலம் கட்டமைத்து பிக்குகள் எண்ணமே சட்டம் என்ற பௌத்தமதசார்பு நாடாக இலங்கைத் தீவை மாற்றியுள்ளனர்.

இதனை அனைத்துலகத் தலையீட்டாலேயே மாற்ற முடியும். இதற்கு ஈழத்தமிழ் அரசியல் வாதிகள் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை சிறுபான்மையினப் பிரச்சினையல்ல காலனித்துவத்தால் உருவாக்கப் பட்டுத் தீர்க்கப்படாத அனைத்துலக மன்றத்தால் தீர்க்க்பபட வேண்டிய இறைமைப் பிரச்சினை என்பதைத் தெளிவாக உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

ஆனால் இதில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் ஈழத்தமிழர் இறைமை என்பதைத் தங்களின் தன்னலம் காரணமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முன்னிலைப்படுத்தாமை சிறிலங்கா 1977ம் ஆண்டின் வட்டுக்கோட்டைத் தீர்மான ஏற்பு என்ற குடியொப்ப மக்களாணையை வலுவிழக்க வைக்க இன்னொரு குடியொப்பத்தை நடாத்த முயற்சிக்கும் ஈழத்தமிழர் இறைமை மீதான இரண்டாவது தாக்குதலுக்கு வழி செய்துள்ளது.

2021இல் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் தருமலிங்கம், சிறீகாந்தா தங்கள் கட்சிகள் சார்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர்க்கு குடியொப்பம் மூலம் மனித உரிமைகள் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் எனத் ஈழத்தமிழர்கள் சார்பாக அனுப்பிய கடிதமே இன்று குடியொப்பத்திற்கான உலக அழைப்பாகப் பரிணாமம் அடைகிறது. 1977 குடியொப்பம் மக்களாணை அதனை நடைமுறைப்படுத்துவதிலேயே 1978 முதல் 2009 வரையான ஈழத்தமிழர்களின் நடைமுறையரசு செயற்பட்டது. அதனை முள்ளிவாய்க்காலில் ஈழத்தமிழின அழிப்பாக 170000 ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்து இன்று வரை ஈழத்தமிழர் தாயகத்தை படைபல ஆக்கிரமிப்புச் செய்யும் அந்நிய அரசாகச் சிறிலங்கா உள்ளது. இதுவே இதில் ஈடுபட்ட அதன் அரசத்தலைவர்களும் படையினரும் அனைத்துலக நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்குவதற்கான அனைத்துலகச் சட்டத்தன்மையைத் தோற்றுவிக்கிறது. எனவே இன்னொரு குடியொப்பம் என்பது இனஅழிப்பாளர்கள் தங்களுக்கான அனைத்துலகச் சட்டத்தின் பிடியிலிருந்து தம்மைக்காப்பாற்றும் முயற்சியாகவே முன்னெடுக்கப்படும். இந்நிலையில் ஒரு குடியொப்பம் நடைபெறுவதற்கான சனநாயக அரசியல் பண்பாடோ பாதுகாப்பான சூழலோ அங்கில்லை. சரி அரைவாசியான ஈழத்தமிழ் மக்கள் உலகநாடுகளில் அரசியல் புகலிடம் பெற்று வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் விருப்பு அறியப்படாத எந்தக் குடியொப்பமும் 1977 குடியொப்ப முடிவை மாற்ற முடியாது. எனவே குடியொப்பமல்ல ஈழத்தமிழர்களின் வெளியக தன்னாட்சி உரிமையை உலகு ஏற்பது மட்டுமே ஏற்புடைய தீர்வை ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்குத் தர முடியும் என்பதே இலக்கின் உறுதியான பதில். ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் ஒரு பொதுவெளியில் ஒருங்கிணைந்து செயற்படாது தாம் நினைத்தது எல்லாவற்றையும் மக்கள் விருப்பாக வெளியிடும் முறைமையின் அபாயத்திற்கு இது நல்ல உதாரணம் என்பதையும் இவ்விடத்தில் இலக்கு வலியுறுத்தி கூற விரும்புகிறது.

**ஆசிரியர்**

# சுயாதீனத்தை இழந்த சுயாதீன ஆணைக்குழு

அகிலன்

அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் தயங்காது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு சுயாதீன ஆணைக் குழுவான பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரட்னாயக்க பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டிருக்கின்றார். ஜனகவுக்கு எதிரான நகர்வு தான்தோன்றித் தனமானது, அறநெறிகளுக்கு முரணானது என்பதைத் தெரிந்துகொண்டே இந்த நகர்வை அரசாங்கம் மேற்கொண்டது. பொது ஆணைக்குழு ஒன்றின் தலைவர் இவ்வாறு நாடாளுமன்றத்தினால் பதவி நீக்கப்பட்டிருப்பது இதுதான் முதல் தடவை. இதன்மூலமாக தவறான மற்றொரு முன்னுதாரணத்தை அரசாங்கம் ஆரம்பித்து வைத்துள்ளது.



ஜனநாயகத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாக இருப்பதுதான் சுயாதீன ஆணைக் குழுக்கள். அதில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது தேசிய பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பதுடன், பொருளராதார, பாதுகாப்பு மற்றும் மின்சக்தி துறையின் ஒழுங்குமுறை விவகாரங்ளுக்கான கண்காணிப்பகமாகவும், மசகு சந்தையின் கட்டுப்பாட்டாளராகவும் செயற்படுகிறது. மின்சார உற்பத்தி, விநியோகம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை ஒழுங்குறுத்துவதற்கான பொறுப்பு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு உண்டு.

ஆணைக்குழு வழங்கும் முக்கிய பல சேவைகளில் மின்சாரத்துறை முக்கியமானது. மின்சாரம் அதிகூடிய கிடைக்கும் தன்மை, சிறந்த விநியோகம், நுகர்வோர் சேவையின் தரத்தை மேம்படுத்தல் போன்ற விடயங் களை உறுதிபடுத்துதல் சிலவாகும். நாடாளுமன்றத்தால் 2009ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது மின்சக்தி துறையை ஒழுங்குபடுத்துவதற்காக நியமிக்கப்பட்டது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளானது, ஆணைக் குழு மற்றும் அதன் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் நியமனத்தை தொடர்ந்து 2003ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஐந்து பேரைக் கொண்ட ஆணைக் குழுவானது அரசியலமைப்பு சபையின் ஒப்புதலின் கீழ் கொள்கை அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழுவின் பிரதான இலக்காக ஏற்கனவே உள்ள மின்சார நுகர்வோர் மற்றும் எதிர்கால நுகர்வோர் ஆகியோருக்கு மிகவும் சமத்துவமான, நிலையான விதத்தில் பாதுகாப்பான, நம்பத்தகுந்த, நியாயமான விலையில் உட்கட்டமைப்பு சார்ந்த சேவை வசதிகளை உறுதிசெய்யும் வகையில் இலங்கையின் பொது உட்கட்டமைப்பு ஆணைக்குழுவின் எல்லைக்குள் அனைத்து செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துதல் அமைந்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அரசியல் தலைவர்கள் தான்தோன்றித்தனமாக எடுக்கக்கூடிய முடிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், மக்களின் நலன்களை நோக்கமாகக் கொண்ட செயற்பாடுகள உறுதிப்படுத்துவதற்குமாகத்தான் இவ்வாறான சுயாதீனக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், அரசியல் தலைவர்கள் தமது மக்கள் விரோத – ஜனநாய விரோத செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நாடாளுமன்றத்தில் தமக்குள்ள பெரும்பான்மையையும், ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தையும்தான் நம்பியிருக்கின்றார்கள் என்பது மீண்டும் ஒரு தடவை நிரூபணமாகியுள்ளது.

கடந்த வருட நடுப்பகுதியில் தொடர்ச்சியானமின்சாரத்தடையினால்நாடுபெரும்பாலான நேரங்களில் இருளில் மூழ்கியிருந்தது. பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள், சிறிய தொழிற்சாலைகளை நடத்துபவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இவ்வாறு மின்சாரத்தை தடை செய்வதற்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பது கட்டாயமாக இருந்தது. மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் காஞ்சனா விஜயசேகரவுடன், ஜனக ரட்னாயக்க முரண்பட ஆரம்பித்தது இந்த சந்தர்ப்பத்தில்தான்.

உயர்தர பரீட்சை இடம்பெறும் போது நாட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வந்தற்கு எதிராக அவர் குரல் கொடுத்தார். அந்த மின்தடைக்கு அனுமதி வழங்கவும் அவர் மறுத்தார். இதன்போது 24 மணி நேரம் மினசாரத்தை வழங்கவேண்டும் என 3இலட்சம் மாணவர்களுக்காக ஜனக ரத்னாயக்க அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வந்ததுடன் மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் சென்று முறையிட்டார். இது அமைச்சர் காஞ்சனாவுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியது. அதேபோல அரசாங்கத்தின் பார்வையும் அவர் மீது பாய்ந்தது.

இதன் அடுத்த கட்டமாக, மின்தடையை முற்றாக இல்லாதொழித்த அரசாங்கம், மின் கட்டணத்தை பல மடங்காக அதிகரித்தது. மக்களால் தாங்க முடியாத அளவுக்கு மின் கட்டணம் அதிகரிக்கப்படும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மக்களின் பக்கம் இருந்து ஜனக ரத்னாயக்க செயற்பட்டார். உண்மையில் மின்கட்டணத்தை இந்தளவுக்கு உயர்த்தியிருக்கத் தேவையில்லை என்பதை அவர் ஆதாரங்களுடன் முன்வைத்தார். இதனை 24 வீதத்தினால் குறைக்க முடியும் என அவர் கூறினார். இவ்விடயத்தில் அமைச்சர் காஞ்சனாவுடன் அவர் நேரடியாகவே முரண்பட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமையவே மின்சார கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானம் எடுத்தது. இதற்குப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கவில்லை.வழமை போல் பதவி விலகுமாறு அரசாங்கம் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அழுத்தம் பிரயோகித்தது. இதனை தொடர்ந்து ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பதவி விலகினார்கள். அவர்கள் சுயமாகவே விலகியதாக அரசாங்கம் தெரிவித்தது. ஆனால் தலைவர் பதவி வகித்த ஜனக ரட்னாயக்க மாத்திரம் பதவி விலகவில்லை.

அதன் விளைவுதான் ஜனக ரட்னாயக்க இப்போது பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து நாடாளுமன்றத்தினால் தூக்கப்பட்டுள்ளார்.

எந்தவொரு அமைச்சரும், அரசாங்கமும் தமது முடிவுக்கு எதிராக யாராவது சவால் விடுத்தால் அவரைப் பதவியிலிருந்து தூக்குவதற்கு எதனையும் செய்யத் தயங்குவதில்லை. நாடாளுமன்றத்தில் அரசுக்குப் பெரும்பான்மை உள்ளது. ஜனாதிபதியிடம் நிறைவேற்று அதிகாரம் உள்ளது. ஆக, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

ஆணைக்குழுவின் தலைவரை பதவி நீக்குவதற்காக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட யோசனை சட்டத்திற்கு முரணானது என்பதுடன், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைக்கும் முரணானது என்பது எதிர்க்கட்சிகள் பலவற்றினாலும் சுட்டிக்காட்டப்பட்டது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தில் ஏதேனும் உறுப்பினர் ஒருவரை நீக்க வேண்டுமாயின் அவர் மீதான ஒவ்வொரு குற்றச்சாட்டும் விரிவாக விளக்கப்பட வேண்டும். அதற்கான சாட்சியங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

முதலில் அவர் குற்றவாளியா? நிரபராதியா? என்பதனை உறுதிப்படுத்த நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. நீதிமன்றம் குற்றவாளியல்ல என்று கூறினால் அவர் பதவியில் தொடரலாம். குற்றவாளியென்று கூறினால் அவரை பதவி நீக்க முடியும். ஆனால் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் எந்த சாட்சியங்களும் முன்வைக்கப்படவில்லை. இந்த நிலையில், நாடாளுமன்றப் பெரும்பான்மையை மட்டும் நம்பி இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

கடந்த வருடம் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சியைத் தொடர்ந்து ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினார்கள். இந்த நாடாளுமன்றமும் மக்களின் ஆணையை இழந்த ஒன்றாகவே கருதப்பட்டது. தலைமறைவாக – மறைந்து திரிய வேண்டியவர்களாக மொட்டு அணியின் எம்.பி.க்கள் இருந்தார்கள். இதில் பெரும்பாலானவர்கள் இன்று வரை தமது ஊர்களுக்கு செல்ல முடியாதவர்களாகவே உள்ளனர். இன்று மக்களுக்காக குரல் கொடுத்த ஒரு ஆணைக்குழுவின் தவைரை பதவி நீக்க அவர்கள் வாக்களித்துள்ளார்கள்.

அரச நிறுவனங்கள் சுயாதீனமாக இருந்தாலும் பின்னால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்பதே இந்த தீர்மானத்தின் ஊடாக தெளிவாகின்றது. சுயாதீன ஆணைக்குழுக்கள் இப்போது ஸ்தம்பிதமடைந்துள்ளன. தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலுக்கு அறிவித்த போதும், அதற்காக அரசாங்கம் நிதியை வழங்கவில்லை. சுயாதீனம் என்று சொன்னாலும், தீர்மானங்களின் பின்னால் பெரும் அழுத்தங்கள் இருக்கின்றன. இதன்படியே ஜனகவுக்கு எதிராக இந்த தீர்மானம் கொண்டுவரப்படுகின்றது.

சுயாதீன ஆணைக்குக்கள் சுயாதீனமாகச் செயற்பட முற்பட்டால் இதுதான் நடைபெறும் என்பது உணர்த்தப்பட்டிருக்கின்றது!

• • •

நேர்காணல்

**மகாவலி ஜே என்ற பெயரில் புதிதாக ஒரு வலயம் உருவாக்கப்படுகின்றது. இதன் பின்னணி நோக்கங்கள் என்ன?**

மகாவலி எல் திட்டம் முல்லைத்தீவில் மக்கள் மத்தியில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இது தொடர்பாக அனைவரும் அறிந்திருப்பார்கள். மகாவலி ஜே வலயத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளும், மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச சபைப் பிரிவும், வவுனியா வடக்கு பிரதேச சபைப் பிரிவும் உள்வாங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. என்பற்றை உள்ளடக்கியதாக ஜே வலயத்தை உருவாக்கியிருப்பதாக அறியக்கூடியதாக இருக்கின்றது. இந்தத் திட்டங்களின் மூலமாக வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் தாயகப் பகுதிகளை ஆக்கிரமித்து, அதன் மூலமாக சிங்கள மக்களுக்கு அனைத்தையும் வழங்கி - அதனூடாக இங்கு குடியேற்றங்கள் தொழிற்சாலைகளை உருவாக்கி இனப்பரம்பலை மாற்றியமைப்பதுதான் இலங்கை அரசாங்கத்தின் நோக்கம்.

இதில் ஜேயின் நடவடிக்கைகளில் இன்னும் போகப்போகத்தான் எவ்வளவுக்குச் செய்யப் போகின்றார்கள் என்பது தெரியும். ஆனால், நாங்கள் அறிந்தவரையில் ஜே வலயத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ள கிராமங்களில் அரச, தனியார் காணி விபரங்கள், வீதிகள், குளங்கள், வன இலாகா, வன ஜீவராசிகள் திணைக்களத்துக்குச் சொந்தமான அதிகாரங்களை வைத்து, எங்களுடைய காணிகளைப் பறித்து சிங்களவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருப்பதுதான் அவர்களுடைய நோக்கம்.

உதாரணத்துக்கு வவுனியா வடக்குடன் சேர்ந்த கரைத்துறைப்பற்று, ஒட்டுசுட்டான் பகுதிக் குள் உள்ளடங்கப்பட்ட காணிகளில் பெரும்பாலான குளங்களை எல்லாம் அபகரித்து கெவில் ஓயா என்ற திட்டம் ஒன்றை உருவாக்கி ஆறாயிரம் ஏக்கர் காணியை மணலாற்றில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு வழங்கும் நடவடிக்கைதான் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்குது.

இவ்வாறு காணிகளை வழங்கும் போது விகிதாசார அடிப்படையிலாவது தமிழ் மக்களுக்கும் கொடுத்திருந்தால் அதில் பாகுபாடு தெரியாத ஒரு நிலைமை இருக்கும்.

# மகாவலி "ஜே" வலய பிரகடனம்! பின்னணியில் ரகசியத் திட்டம்!!




**வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவையும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் மையப்படுத்தி மகாவலி "ஜெ" வலயம் என்ற பெயரில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினால் புதிய வலயம் ஒன்றைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. எதற்காக இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராஜா ரவிகரன் இதன் பின்னணியில் இருக்கும் ரகசியத் திட்டங்கள் தொடர்பில் உயிரோடைத் தமிழின் தாயக களம் நிகழ்வில் இந்த வாரம் கலந்துகொண்டு தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்தார். அதிலிருந்து முக்கியமான பகுதிகளை இலக்கு வாசகர்களுக்காகத் தருகின்றோம்.**

## வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராஜா ரவிகரன் செவ்வி

மகாவலி அதிகார சபையினால் ஏற்கனவே எல் வலையத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச சபைப் பிரிவுகளைச் சேர்ந்த 34 கிராம சேவகர் பிரிவுகள் அடங்கப்பட்டுள்ளது. இந்த எல் வலையம் அனேகமாக அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். இதனால், எங்களுடைய இதயபூமி என்று சொல்லக்கூடிய மணலாறு பக்கத்திலும் சரி அல்லது முல்லைத்தீவு கச்சேரி என்று சொல்லக்கூடிய பகுதியும் கூட இந்த எல் வலையத்துக்குள் இருக்கின்றது.

ஆனால், இந்தப் பகுதிகளில் ஒரு தமிழருக்கும் காணிகள் இல்லை. ஏற்கனவே இங்கு காணிகளை வைத்திருந்த தமிழர்களிடமிருந்த காணிகளை பறித்தெடுத்துள்ளார்கள். மகாவலி ஏ என்றோ எல் என்றோ பெயரை வைத்திருந்தாலும் மகாவலி அபிவிருத்தி சபையின் செயற்பாடு என்னவென்றால், தமிழ் மக்களிடமிருந்து காணிகளைப் பறித்து சிங்கள மக்களிடம் கொடுப்பதுதான். அதற்கான ஒரு திணைக்களமாகத் தான் மகாவலி திணைக்களம் செயற்படுகின்றது.

மகாவலி எல் திட்டத்தின் கீழ் நான்காயிரத்து முற்றூற்று அறுபத்திஏழு ஏக்கர் காணி முல்லைத்தீவில் அபகரிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பின்னர்கூட சூரியனாறு பகுதியில் ஆயிரத்து எழுநூறு ஏக்கர் காணி உட்பட வேறு சில காணிகளும் உள்வாங்கப்படலாம் என்ற யோசனை கூட இருக்கின்றது.

இதற்குள் மகாவலி ஜே என்பதையும் கொண்டுவந்து துணுக்காய், மாந்தை கிழக்கு, மாந்தை மேற்கு பகுதிகளிலும் ஒவ்வொரு பிரிவுகளிலும் தலா 15 கிராம சேவகர் பிரிவுகள் காணிகள் போன்றவற்றின் விபரங்களைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு கடந்த 2 ஆம் திகதி சிங்கள மொழியில் அரச திணைக்களங்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருப்பதாகவும் நாங்கள் அறியக்கூடியதாக இருக்கின்றது.

**இந்த ஜே வலய உருவாக்கத்தின் மூலமாக அண்ணளவாக எத்தனை தமிழ்க் குடும்பங்கள் பாதிக்கப்படும்?**

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,40,000 மக்கள் இருக்கின்றார்கள். இதில் புதுக்குடியிருப்பைத் தவிர ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற மக்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள்.

**மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் இந்தத் திட்டங்கள் முன்னெடுக் கப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. மகாவலி திட்டத்தின் நீர் இந்தப் பகுதிக்குக் கொண்டு வரப் படுவதற்கான வாய்ப்புக்கள் எந்தளவுக்குள்ளன?**

மகாவலி நீர் எமது காலத்தில் மட்டுமல்ல, எமக்கு அடுத்த–அடுத்த சந்ததியினரது காலத்திலும் இந்தப் பகுதிக் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை. தமிழ் மக்களிடமிருந்து காணிகளைப் பறித்து அவர்களை வெளியேற்றுவது மட்டும்தான் அவர்களுடைய நோக்கமே தவிர, வேறு எதுவும் இல்லை. மகாவலி அதிகார சபை என்ற போர்வைக்குள் அதற்குக் கொடுக்கப்பட்ட தமிழ் மக்களின் ஏற்கனவே பாதிக்கப்பட்ட காணிகள், பாதிக்கப்பட்ட குளங்கள் போன்றவற்றை அபகரித்து தமது வேலைகளை செய்வதுதான் அவர்களுடைய நோக்கம். எமக்கு இதில் எந்தவிதமான நன்மையும் இல்லை. இந்த மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு உலக வங்கியினாலும், ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் நிதி வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. இந்த சபையின் நோக்கமே தனிச் சிங்களத்துக்கான நோக்கம். இப்படியிருக்கும் நிலையில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இவற்றுக்கான நிதியை வழங்குகின்றன என்றால், அவர்களும் இணைந்து எம்மை கொல்லுகின்றார்கள் என்பதுதான் கருத்து.

**அடுத்தடுத்த சந்ததிக்குக் கூட மகாவலி நீரே வராத பகுதி என்று இதனைக் குறிப்பிடுகின்றீர்கள். அவ்வாறான ஒரு பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வது எந்தளவுக்கு சாத்தியமானது?**

இரண்டு தலைமுறை என்று சொன்னானே தவிர, நீரே வராத பகுதி என்று சொல்லவில்லை. எமது நிலங்களை அபகரித்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்ட பின்னர் அதற்கான வசதிகளை அவர்கள் செய்வார்கள். மணலாறு பகுதி எவ்வாறு அபகரிக்கப்பட்டு சிங்கள மயமாக்கப்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும். இப்போது, 12,187 பேர் அங்கு இருக்கின்றார்கள். தனியான பிரதேச சபைச்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# தமிழர்களையும், முஸ்லீம்களையும் பிரித்தாளும் சதி 1990இல் ஆர்.பிரமதாசா ஆரம்பித்தார்.!

## பாகம் 1

பா.அரியநேத்திரன்



தமிழ்களையும், முஸ்லீம்களையும் பிரித்தாளும் சதியை ஆரம்பித்தவர் 1990இல் ஜனாதிபதியாக இருந்த ஆர்.பிரமதாசா அது இன்றும் தொடர்கிறது என்பதே மறைக்கப்படாத உண்மை. ஈழவிடு தலைப்போராட்டம் இளைஞர் அமைப்புகள் கரந்தடி தாக்குதல்களை ஆரம்பித்த காலம் அல்பிரட் துரையப்பா 1975 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் நாள் யாழ்ப்பாணம் சுழிபுரம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய முன்றலில் வைத்து விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதுவே இலங்கைத் தமிழர் வரலாற்றில் இடம்பெற்ற முதலாவது அரசியல் கொலையாகும். அன்று தொடக்கம் 1986, நவம்பர், 23, வரை கரந்தடி தாக்குதல்கள் பரவலாக வடக்கு கிழக்கு முழுவதும் இடம்பெற்றன. கரந்தடி தாக்குதல் ஆரம்பித்த காலத்தில் பல்வேறு சுற்றிவளைப்புகள் கைதுகள், கடத்தல்கள், என இராணுவத்தினரால் அரங்கேற்றப்பட்டன.



அந்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் முதன் முதலாக கடந்த 1987, ஜனவரி,28ம் திகதி கொக்கட்டிச்சோலை படுகொலை என பேசப்பட்ட இறால் வளர்ப்பு பண்ணை மற்றும் படுவான்கரை பெருநிலத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் பாரிய படுகொலைகளாக உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் பேசப்பட்டன.

இதன் பின்னர் 1987, யூலை29இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட கையோடு 1987,யூலை,30இல் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வருகை தந்தது. 1987,அக்டோபர்,10இல் இந்தியப்படைக்கு எதிராக விடுதலைப்புலிகள் 1,ம் கட்ட ஈழப்போர் என பெயரிட்டு மோதல் இடம்பெற்றன. விடுதலைப்புலிகள் கரந்தடி தாக்குதலில் இருந்து மரபு படையணியாக வளர்ச்சி பெறுவதற்கு முதலாம் கட்ட ஈழப்போர் என இதற்கு பெரிட்டனர்.

1990, மார்ச்,24இல் இந்தியப்படை இலங்கையை விட்டு வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த வரதராஜப் பெருமாளையும் அழைத்துக்கொண்டு வெளியேறியது.

அதற்கு முன்னர் 1988,டிசம்பர்,18ம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில்தான் ஆர். பிரமதாசா ஜனாதிபதியாக பதவி ஏற்றிருந்தார் இந்தியப்படை வெளியேற விடுதலைப்புலிகளை பயன்படுத்திய ஆர் .பிரமதாசா இந்தியப்படை வெளியேறிய கையோடு அடுத்த காய்நகர்த்தலாக தமிழ் முஸ்லீம் மக்களை பிரித்தாளும் திட்டத்தை வகுத்தார்.

இதற்கு ஒரு காரணம் இருந்தது இலங்கை அரசுக்கு எதிரான ஈழவிடுதலைப்போராட்டத்தில் பல இயக்கங்களில் முஸ்லீம் இளைஞர்களும் இணைந்து போராடியவரலாறுகளும், பல தமிழ் போராளிகள் முஸ்லீம் கிராமங்களில் பாதுகாப்பாக இருந்த சம்பவங்களும் 1976,தொடக்கம் 1990, காலம் வரை இருந்தது.

விடுதலைப்புலிகளில் இணைந்து போராடி மாவீரர்களாக 45, முஸ்லிம் இளைஞர்கள் உயிர் நீத்த வரலாறுகளும் இருந்தது இந்த உண்மையை அறிந்த ஜனாதிபதி ஆர் .பிரமதாசாவும்,பிரதமரான டீ.வி.விஜயதுங்காவும் பதவி வகித்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்க காலத்தில் தமிழ் முஸ்லீம் மக்களை பிரித்தாளும் தந்திரமாகவே முஸ்லீம் இளைஞர்களை கொண்டு தமிழர்களை அடக்கும் செயல் திட்டமாக முஸ்லிம் ஊர்காவல் படையினர் 1990இல் இராணுவத்துடன் சேர்ந்து கிழக்கு மாகாணத்தில் தமிழர்களை குறிவைத்து தாக்குதல்கள் இடம்பெற்ளன.

முஸ்லீம் ஊர்காவல்படையினருக்கு இராணுவ முகாங்களில் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட்டன. முதலாவது நடவடிக்கைக்காக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் தேர்த்தெடுக்கப்பட்டது.



1990,யூன்,10இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்திற்கு எதிராக 2ம் கட்ட ஈழப்போரை ஆரம்பித்தனர் இந்தப் போராட்டம் ஆரம்பித்து மறுதினம் ஆரம்ப நடவடிக்கை 1990, யூன், 11ம் திகதி காரைதீவு சந்தியில் இருந்து ஆரம்பித்த சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கை மட்டக் களப்பு மாவட்டம் வாழைச்சேனை வரை பிரதான வீதி ஊடாக தொடர்ந்தது.

பல கிராம தமிழ் இளைஞர்கள் எழுவான்கரை பகுதியில் வசிக்கமுடியாமல் படுவான்கரை பெருநிலப்பகுதிகளில் உள்ள பல கிராமங்களுக்கு இடம்பெயர்ந்தனர். பழுகாமம், அம்பிளாந்துறை, கடுக்காமுனை, அரசடித்தீவு, பண்டாரியாவெளி, படையாண்ட வெளி, மகிழடித்தீவு, முதலைக்குடா, கொக்கட்டிச் சோலை, பட்டிப்பளை, முனைக்காடு, களுமுந்தன்வெளி, தும்பன்கேணி, திக்கோடை, நாற்பதாம்கிராமம் என பல கிராமங்களில் அக்கரைப்பற்று தொடக்கம் சித்தாண்டி வரையிலான படையினரின் கட்டுப்பாட்டு பகுதியாக அப்போது இருந்த எழுவான்கரைபகுதி இளைஞர்கள் உறவினர் வீடுகளில் படுவான்கரை பெருநிலப்பக்கம் இடம்பெயர்ந்தனர்.

படுவான்கரைபெருநிலம் அப்போது விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டு பிரதேசமாக இருந்தது என்பதால் எழுவான்கரைப்பகுதி இளைஞர்கள் அங்கு தஞ்சம் அடைந்தனர்.

எஞ்சிய தமிழ் இளைஞர்கள் பலரை கைதுசெய்து படையினரும், முஸ்லீம் ஊர்காவல் படையினரும் சந்திகளில் அவர்களை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்து பெற்றோல் இட்டு தீயிட்டு எரித்தனர். கிழக்கு மாகாணம் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ் கிராமங்களில் அச்சமும் ஒருவித பதட்டமும் தொடர்ந்தவண்ணம் இருந்தது.

1990,யூண்,20இல் அம்பாறை மாவட்டம் வளத்தாப்பிட்டியிலும், 1990, யூன், 29இல் வீரச்சோலையிலும்,1990, யூலை,04இல் மல்லிகைத் தீவிலும்,1990, யூலை,10ல் அம்பாறையிலும்,1999, ஆகஸ்ட், 08இல் சவளக்கடையிலும், பல நூற்றுக் கணக்கான தமிழர்கள் இனப்படுகொலை செய்யப் பட்டனர்.



இதனால் மக்கள் ஆலயங்கள், பொது இடங்களில் கூடி இராப்பொழுதுகளை கழித்தனர் இவ்வாறான அவலமும் துன்பமும் அம்பாறை மாவட்டம் முழுவதுமாக தமிழ் கிராமங்களில் இடம்பெற்றுக் கொண்டிருந்த இருந்த வேளையில் தான் வீரமுனை படுகொலை இடம் பெற்றது.

ஆம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேசத்தில் வீரமுனையையும் அதன் சுற்று வட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# 19 ஆண்டுகள் கடந்தும் கொலையாளிகள் சுதந்திரமாக வெளியில் நடமாடுகின்றனர்

## நீதி மறுக்கப்பட்ட சமூகமாக ஊடகர்கள்

சசி புண்ணியமூர்த்தி

ஊடகவியலாளர் நடேசன் (ஐயாத்துரை நடேசன்) அவர்களின் 19ம் ஆண்டு நினைவு வணக்க நாளை இன்னும் சில தினங்களில் அனுஸ்டிக்கவுள்ள நிலையில் இதுவரை அவரது கொலைக்கான நீதி கிடைக்கவில்லை என்பது ஒரு கசப்பான உண்மை என்று தான் கூறவேண்டும்.

மட்டக்களப்பில் தனது வீட்டிலிருந்து 31.05.2004 அன்று அலுவலகம் நோக்கி பணிக்காக சென்றுகொண்டிருந்த வேளை சிறிலங்கா ஒட்டுக் குழுக்களின் ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட "நாட்டுப்பற்றாளர்" ஊடகவியலாளர் நடேசன் (ஐயாத்துரை நடேசன்) அவர்களின் 19ம் ஆண்டு நினைவு வணக்கநாள். இன்றும் அவருக்கான நீதி கிடைக்கவில்ல.

2004ம் ஆண்டு வைகாசி மாதம் 31ம் நாள் மட்டக்களப்பில் தனது வீட்டில் இருந்து காலை பணிக்குச் சென்றுகொண்டிருந்த போது இவர் ஒட்டுக் குழுக்களினால் சுட்டுக் கொல்லப் பட்டிருந்தார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் படுகொலை செய்யப்பட்டபோது அகவை 50 ஆகும்.

யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து வளர்ந்த ஐ.நடேசன் தொழில் நிமித்தம் பல ஆண்டுகள் மட்டக்களப்பில் இருந்து வாழ்ந்தது டன், தென் தமிழீழ மக்கள் மீதும், அந்த மண் மீதும் அளப்பரிய பற்றுக்கொண்டிருந்தார்.

நீண்ட காலம் ஊடகப் பணி செய்து அனுபவம் பெற்றிருந்த இவர், ஊடகத்துறையில் முழு நேரமாகப் பணியாற்றாது விட்டாலும், ஒரு முழுநேர ஊடகவியலாளன் ஆற்றும் பணிக்கு ஈடாக, அல்லது அதற்கு மேலாகவும் தனது ஊடகப் பணியை செவ்வனே ஆற்றியிருந்தமை யாவரும் அறிந்த உண்மை.

இவரது ஊடகப்பணிக்கு சாகித்திய விருது, சிறந்த ஊடகவியலாளர் விருது (2000), ஆளுநர் விருது போன்ற பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டமை, அவரது ஊடகப் பணிக்கு கிடைத்த சான்றுகளாகும். இவர் ஒட்டுக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்ட பின்னர் கூட தனது தலைசிறந்த ஊடகப்பணிக்காக மதிப்ப ளிக்கப்பட்டவர்.

20 வருடங்களுக்கு மேலாக கொழும்பு வீரகேசரி பத்திரிகையின் செய்தியாளராகவும், 'நெல்லை நடேசன்' என்ற பெயரில் பத்தி எழுத்தா ளராகவும் இருந்த இவர், 1997ஆம் ஆண்டு முதல் லண்டனை தளமாகக் கொண்டியங்கிய ஐ.பி.சி வானொலி, கொழும்பு சக்தி தொலைக்காட்சி உட்பட ஏனைய பல ஊடகங்களுக்கு தனது இறுதி மூச்சுவரை உண்மையாகவும், நேர்மையாகவும் பணியாற்றியிருந்தார்.

தமிழர்களுடைய வரலாறுகளை மடக்கள ப்பு மக்கள் மட்டுமன்றி, இன அழிப்பை அதிகம் எதிர்கொண்ட தென் தமிழீழ மக்கள் மீதான இனப்படுகொலைகள் பற்றிய விபரங்களை விரல் நுனியில் வைத்திருந்த இவர், அந்த மக்கள் நினைவுகூரப்பட வேண்டும் என்பதிலும், அந்தப் படுகொலை பற்றிய விபரங்களை ஏனையவர்கள், குறிப்பாக இளையோர் அறிந்திருக்க வேண்டும் என்பதிலும் கரிசனை கொண்டிருந்தவர்.

இனப் படுகொலைகள் மட்டுமன்றி மட்டக்களப்பு பற்றியும், தென் தமிழீழம் பற்றியும் எப்பொழுது எந்தத் தகவல் யார் கேட்டாலும்



உடனே சொல்லும் ஆற்றல் கொண்டிருந்த இவர், சொல்வதுடன் நிறுத்தி விடாது அவற்றை எழுதி தொலைநகலில் அனுப்பியும் வைப்பவராக இருந் தவர் என்பது நிதர்சனம்.

ஏதாவது ஒரு இனப் படுகொலை அல்லது முக்கிய விடயங்கள் பற்றி ஊடகங்கள் கேட்க மறந்து விட்டால் கூட அதனை ஞாபகம் ஊட்டி உடனே அனுப்பி வைப்பார்.



எதனையும் துணிகரமாக நேருக்கு நேர் பேசும் இவரது நடைமுறை, உண்மையை அல்லது மக்களிற்கு பாதகமான விடயங்களைக் காட்டும் இவரது குணாம்சம் என்பன காரணமாக பல தடவைகள் பல்வேறுஎதிர்ப்புகளையும், இன்னல்களையும் எதிர்கொண்டவர்.

பல தடவைகள் நேரடியாகவும், தொலை பேசி ஊடகவும் கொலை மிரட்டல், அச்சுறுத் தலுக்கு உள்ளாகியிருந்த போதிலும், அவரது வீட்டின் மீது குண்டுத் தாக்குதல் (2000ஆம் ஆண்டு) இடம்பெற்ற போதிலும் கூட, அஞ்சாது தனது குடும்பத்துடன் இறுதிவரை மட்டு மண்ணில் இருந்து மக்களுக்காகக் குரல்கொடுத்த ஒரு சிறந்த ஊடகர்.

மட்டக்களப்பில் சிறீலங்கா படையினரது கட்டுப்பாட்டில் இருந்த நகர் பிரதேசத்தில் வாழ்ந்த போதிலும், அவ்வப்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் நிருவாகக் கட்டமைப்புக்குள் ஏனைய தென் தமிழீழ ஊடகவியலாளர்களுடன் சென்று அங்குள்ள மக்களின் பிரச்சினைகளையும், கஸ்டங் களையும் வெளிக்கொண்டு வந்தவர்.

பல இக்கட்டான காலங்களில் கூட இவர் போன்ற ஊடகவிலாளர்கள் (தற்பொழுது நாட்டில் வாழ முடியாது புலம்பெயர்ந்துள்ளவர்கள் உட்பட) மக்களிற்காகவும், அவர்களில் நல்வாழ் விற்காகவும், உரிமைகளுக்காவும் ஆற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கும் பணிகளை புலம்பெயர்ந்த மக்கள் மறந்துவிடக்கூடாது.

நாட்டுப்பற்றாளர் என ஐய்யத்துரை நடேசன் அவர்கள் மதிப்பளிக்கப்பட்டதன் மூலம் அவர் ஆற்றிய பணியை நாம் எடைபோட முடியும்.

ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன், மாமனிதர்சிவராம், மயில்வாகன்நிமல ராஜன், லசந்த விக்கிரமதுங்க, டிச்சர்ட் டி சொய்சா முதல் இன்றுவரை 47 க்கும் மேற்பட்ட ஊடகர்கள் இதுவரை படுகொலை செயப்பட்டுள்ளனர்.

இவர்களைப் படுகொலை செய்தவர்கள் யார் என்று தெரிந்திருந்தும், அவர்கள் இன்று சுதந்திரமாக வெளியில் நடமாடிக் கொண்டி ருக்கின்றமையை அவதானிக்க கூடியதாக இருந்தா லும் அவர்கள் இன்று வரை தண்டிக்கப்படவும் இல்லை, இழக்கப்பட்ட உயிர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவும் இல்லை.

சவால் மிகுந்த மட்டக்களப்பு மாவட்டத் தில் பல ஊடக ஜாம்பவான்களை இழந்த இந்த மண்ணில் இன்றும் கூட அச்சுறுத்தலுக்கு மத்தியி லேயே ஊடகர்களின் பயணங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றது .

அன்று நடேசன் யாரால் சுட்டுக் கொல்லப் பட்டாரோ அதே ஒட்டுக் குழுக்கள் இன்றும் அதே பாணியில் தங்களது நடவடிக்கைகளை மட்டக்களப்பு மண்ணில் மேற்கொண்டு தான் வருகின்றார்கள்.

இன்றுவரை இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதி வழங்கப்படவில்லை ஊடகவியலாளர்களை கடத்தியும், காணாமல் ஆக்கியும், படுகொலை செய்தவர்களை மாறி மாறி வந்த அரசாங்கங்கள் பாதுகாத்துக் கொண்டே இருக்கின்றது.

ஆகவே உயிரிழந்த ஊடகவியலாளர்களுக் கான சர்வதேச பொறிமுறை ஊடாக சர்வதேச ஊடக அமைப்புகள் இவற்றை கவனத்தில் எடுத்து இன்றும் கண்முன் நடமாடிக் கொண்டிருக்கும் கொலையாளிகளை சர்வதேச சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.


படுகொலை செய்யப்பட்ட ஊடகவி யலாளருக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும் அவர்களது குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்படும் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு கருத்தில் கொள்ளப்பட வேண்டும் .

இனிமேலும் இது போன்ற படுகொலைகள் மூலம் ஊடகவியலாளர்களின் உயிர்களை இழக் காமல் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போது தான் இந்த படுகொலை செய்யப்பட்ட ஊடக வியலாளர்களின் ஆத்மா சாந்தியடையும் .

பேனா போராளியான ஊடகவியலாளர்கள் இன்றும் பல அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப் படுவதும், அவமானப்படுத்தப்படுவதும் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து வண்ணமே இருக் கின்றது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படும் ஊடகம், ஊடகவியலாளர்கள் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் ஊடகவியலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் கொலையாளிகள் சட்டத்தின் முன்னிறுத்தப்பட வேண்டும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# நவகாலனித்துவ மேலாதிக்கம்

**ஐக்கிய நாடுகள் சபையின் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தி வாழ முடியாத எல்லைகளில் வாழும் மக்களுக்கான ஒன்றிப்பு வார்த்தை முன்னிட்டு ஈழத் தமிழர்கள் குறித்த சமூக ஆய்வாளர் கி.சந்திரமோகன் அவர்களுடன் ஒரு செவ்வி**

**கேள்வி:**

**சிங்கள பௌத்த சிறிலங்கா குடியரசு தன்னிச்சையாக பிரகடனப்படுத்தப்பட்டதன் 51 ஆண்டு கால விளைவுகள் என்ன?**

**பதில்:**

இலங்கை 1948 ம் ஆண்டு சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது.அதாவது அந்நிய நாட்டு ஆதிக்கத்தில் இருந்து மீண்டெழுந்த வருடமாக நாம் இதனைக் கொள்ள முடியும்.ஒரு நாடு அடிமைத் தளையில் இருந்து விடுபட்டு சுதந்திர நாடாக தலைநிமிர்கின்றது என்றால் அந்நாடு புதிய ஒரு பாதையில் பிரவேசிக்கப் போகின்றது. இதனால் நாட்டு மக்கள் பல வழிகளிலும் நன்மையடைவார்கள் என்ற எதிர்பார்ப்பு பரவலாக எதிரொலிப்பது இயல்பாகும்.இலங்கையின் மக்களிடையேயும் இந்த எதிர்பார்ப்பு முன்னதாகக் காணப்பட்ட நிலையில் இலங்கை வாழ் சிறுபான்மை மக்களிடையே இந்த எதிர்பார்ப்பு சற்று அதிகமாகவே காணப்பட்டது.ஏனெனில் சிறுபான்மையினர் அந்நியர் ஆட்சியில் பல்வேறு நெருக்கீடுகளுக்கும் முகம் கொடுத்தமை இதன் முக்கிய ஏதுவாகும்.எனினும் சுதந்திரம் எதிர்பார்த்த சாதக விளைவுகளை சிறுபான்மை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கவில்லை. ஒரு கவிஞர் கூறியதைக் போன்று, " பட்டுவேட்டிக் கனவில் இருந்தவர்களின் கட்டி இருந்த கோவணமும் களவாடப்பட்ட " ஒரு நிலையையே இலங்கையின் சுதந்திரம் ஏற்படுத்தி இருந்தது.நவ காலனித்துவ போக்கில் சுதந்திரத்தின் பின் இலங்கை பயணித்த நிலையில் சிறுபான்மையினரின் நெருக்கீடு மென் மேலும் அதிகமாகியது.



இது ஒரு புறமிருக்க 1972 இல் இலங்கையின் முதலாவது குடியரசு யாப்பு முன் வைக்கப்பட்டது. 1947ம் ஆண்டு முன்வைக் கப்பட்ட சோல்பரி அரசியல் திட்டம் பல்வேறு குறைபாடுகளைக் கொண்டுள்ளதாக இலங்கை அரசியல் தலைவர்களால் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்களும் இடதுசாரி கட்சியைச் சேர்ந் தவர்களும் இக்குற்றச்சாட்டுக்களை தொடர்ச் சியாகவே முன்வைத்தனர். சோல்பரி அரசியல் திட்டம் இலங்கை மக்களின் பிரதிநிதிகளால் உருவாக்கப்படவில்லை.முற்றாக பிரித்தானியரான சோல்பரியினால் உருவாக்கப்பட்டது.பாராளுமன் றம் சட்டவாக்கம் தொடர்பாக போதிய இறை மையைக் கொண்டிருக்கவில்லை.அரசியல் யாப் பின் 29 வது பிரிவு, நீதிமன்றங்களுக்கு இருந்த நீதிப் புனரமைப்பு அதிகாரம், மகாதேசாதிபதியிடம் இருந்த சட்டங்களுக்கு கையொப்பமிடும் அதி காரம் எனப்பலவும் முதலாவது குடியரசு யாப்பு உருவாக ஏதுவானதாக கூறப்பட்டது.

எனினும் பிற்காலத்தில் இந்த யாப்பிலும் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகக் கூறி 1978 ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியல மைப்பு முன்வைக்கப்பட்டதும் தெரிந்தாகும். இந்த இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் பிதாமகனாக காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவே விளங்கினார்.முதலாவது குடியரசு அரசியல் யாப்பு முன்வைக்கப்பட்டு 51 ஆண்டுகள் கடந்துள்ளன.சிங்கள பௌத்தத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் இந்த அரசியல் யாப்பு முன்வைக்கப்பட்டது. இது நாட்டில் பல்வேறு குளறுபடிகள் ஏற்படவும் உந்துசக்தியாக அமைந்ததெனலாம்.இலங்கை பல்லின மக்களும் வாழுகின்ற ஒரு நாடாக விளங்குகின்றது. இங்கு பன்மைக் கலாசாரம் நிலவுகின்றது.எனவே சகலருக்கும் சமவாய்ப்புகள், சமூக உரிமைகள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகும்.யாரும் யாருக்கும் அடிமை இல்லை என்பதோடு அவ்வாறு அடிமையாகஅடங்கிநடக்கவேண்டியஅவசியமும் கிடையாது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் நோக்குகையில் இலங்கையின் முதலாவது குடியரசு யாப்பு இன நல்லிணக்கத்துக்கு அல்லது இன ஒற்றுமைக்கு எந்தளவுக்கு வலுசேர்த்தது என்று நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டில் பன்மைக் கலாசாரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.ஆயினும் இலங்கையில் பன்மைக் கலாசாரம் கருத்தில் கொள்ளப்பட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதா? என்று கேள்வியெழுப்ப வேண்டியுள்ளது. இலங்கையின் 1972 ம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பாக இருக்கட்டும் அல்லது சமகாலத்தில் நடைமுறையில் உள்ள 1978 ம் ஆண்டின் இரண் டாவது குடியரசு யாப்பாக இருக்கட்டும் இந்த யாப்புகள் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை உரியவாறு நிறைவேற்ற தவறியுள்ளன.நாட்டு மக்கள் ஐக்கியத்துடன் கை கோர்த்து ஒன்றாக செயற்படும் போதே நாட்டின் அபிவிருத்தி சாத்தியமாகும்.எனினும் இலங்கையின் குடியரசு யாப்புகளில் காணப்படும் குறைபாடுகள் அபிவிருத்தியை மறுதலிப்பதாகவுள்ளன என்பதே உண்மையாகும்.எனவேதான் புதிய அரசியல் யாப்பின் அவசியம் தொடர்பில் இப்போது அடிக்கடி பேசப்பட்டு வருகின்றது.

இலங்கையில் தொடர்ச்சியாகவே இன வாதம் அதிகளவில் தலைவிரித்தாடுகிறது என் பதையும் மறுப்பதற்கில்லை.இனவாத சக்திகள் இலங்கையின் எழுச்சிக்கு தடையாக உள்ளனர்.

தமிழ் மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை யினர் பல்வேறு உரிமைகளை பெற்றுக் கொள் வதற்கும் இந்த இனவாத செயற்பாடுகளே முட்டுக்கட்டையாக விளங்குகின்றன. சிறுபான் மையினருக்கு "அள்ளிக் கொடுக்காவிடினும் கிள் ளிக் கொடுப்பதற்கும் " இனவாதிகள் தயாராக இல்லை என்பது கசப்பான உண்மையாகும்.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பு நிலவிய இனவாதப் போக்குகளில் இப்போதும் ஒரு மாற்றம் ஏற்பட்டதாக இல்லை.அதனிலும் அதிகரித்த இனவாதப் போக்கினையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.இலங்கை இனவாதத்தால் பல்வேறு சவால்களையும் சந்திக்க நேர்ந்தது.இதனால் ஏற்பட்ட காயங்களின் தழும்புகள் இன்னும் மாறியதாக இல்லை. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு இதுகாலவரை பெற்றுக் கொடுக்கப் படவில்லை.இது தொடர்பில் இதயசுத்தியுடனான செயற்பாடுகள் காணப்படவில்லை என்பதும் பலரின் கருத்தாக உள்ளது.எனவே இனியும் காலம் தாழ்த்தாது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.



1972ம் ஆண்டு யாப்பின் ஊடாக தொகுதி வாரி தேர்தல் முறை முன்வைக்கப்பட்ட நிலையில் இது சிறுபான்மையினருக்கு பெரும் பாதகமாகவே அமைந்தது என்பதும் தெரிந்த விடயமாகும். பெரும்பான்மை வாக்காளர் விரும்பாத ஒருவர் உறுப்பினராக தெரிவு செய்யப்படக் கூடிய நிலை தொகுதிவாரி தேர்தல் முறையில் காணப்பட்டது.

ஜனநாயகத்துக்கு முரணான தேர்தல் முறை யாக தொகுதிவாரி தேர்தல் முறை விளங்கியது. நாடு தழுவிய ரீதியில் கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்துக்கும் பாராளுமன்றத்தில் அவை பெறும் ஆசனங்களுக்கும் இடையில் நீண்ட காலமாக முரண்பாட்டுத் தன்மை நிலவியது. இத்தகைய நிலைமைகள் புதிய தேர்தல் முறைக்கு வித்திட்டிருந்தன.எனினும் 1978 யாப்பின் ஊடாக முன்வைக்கப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையும் எதிர்பார்த்த சாதக விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்பதும் தெரிந்ததேயாகும்.

சுருக்கமாக கூறுமிடத்து 1972ம் ஆண் டின் குடியரசு யாப்பின் மூலம் முன்வைக்கப் பட்ட தொகுதிவாரி தேர்தல் முறை சிறு பான்மை பிரதிநிதித்துவத்தின் வீழ்ச்சிக்கே அடித்தளமிட்டதெனலாம். ஒரு சமூகத்தின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

காடியன்' ஊடகம் மேற்கொண்ட ஒரு பதிவைத் தொடர்ந்து, ரெற்லி *(Tetley)* லிப்ரன் *(Lipton)* உள்ளிட்ட உலகின் முன்னணி தேயிலை உற்பத்தியாளர்களில் சிலர் சிறிலங்காவிலிருந்து தமக்கு தேயிலையை விநியோகிப்பவர்களின் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிகின்ற தேயிலைத் தொழிலாளர்களின் நிலைமை தொடர்பாக ஆய்வை ஆரம்பித்துள்ளனர்.



வேலையை ஏற்கனவே நிறுத்திவிட்டதாக ரெற்லி நிறுவனம் தெரிவித்துள்ள அதே நேரம், லிப்ரன் மற்றும் பிஜி ரிப்ஸ் *(PG Tips)* போன்றவற்றைச் சொந்தமாக வைத்திருக்கின்ற எக்காரெர்றா *(Ekaterra)* என்ற பெருநிறுவனம் சிறிலங்காவின் தேயிலைத் தோட்டங்கள் தொடர்பாக தற்போது வெளிவந்திருக்கின்ற தகவல்கள் தொடர்பாக ரெயின்பொறெஸ்ற் அலையன்ஸ் *(Rainforest Alliance)* அமைப்பைத் தாம் தொடர்புகொண்டிருப்பதாக தெரிவித்திருக்கின்றனர். அதே நேரம் சிறிலங்காவின் தேயிலைத் தோட்டங்களிலிருந்து தேயிலையைக் கொள்வனவுசெய்யும் இன்னொரு நிறுவனம், சம்பந்தப்பட்ட தேயிலைத் தோட்டங்களுடன் இவ்விடயங்கள் தொடர்பான விளக்கத்தைக் கேட்டிருப்பதாகவும் கூறியிருக்கின்றது.

பிரதானமாக, சிறீலங்காவின் மத்திய மலைநாட்டுப் பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற வீதத்தைத் தொட்ட பணவீக்கத்தின் காரணமாக உணவுப்பொருட்களின் விலை இன்னும் உயர்வாகவே இருக்கிறது.



தோட்டக் கண்காணிமார் தன்னை நடத்திய விதத்தின் காரணமாக தனது உளநலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று தேயிலைத் தொழி

# எமது மேலாளர்களின் சொகுசான வாழ்க்கைக்காக நாங்கள் எங்கள் இரத்தத்தைச் சிந்துகிறோம்:

# தேயிலைத் தோட்டத்தொழிலாளர்களின் உள்ளக்குமுறல்

தமிழில்: ஜெயந்திரன்

ஏற்கனவே வர்த்தகத்துக்கான உரிமத்தைப் பெற்றிருக்கின்ற 10 தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் போதிய உணவைப்பெறமுடியாமல் சிரமப்படுவதையும், மிகவும் மோசமான சூழ்நிலையில் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதையும் அறிந்த பின்னர், பூகோள ரீதியாக, வர்த்தகம் செய்வோருக்கான உரிமத்தை வழங்கும் இரண்டு அமைப்புகளான நீதியான வர்த்தகம் *(Fairtrade and the Rainforest)* மழைக்காடுகளுக்கான சம்மேளனம் போன்றவையும் இவ்விடயங்கள் தொடர்பாக தமது விசாரணைகளைத் தற்போது தொடங்கியுள்ளன.

சிறீலங்காவில் உணவு, எரிபொருள், மருந்து ஆகியவற்றில் கணிசமான விலையுயர்வைத் தோற்றுவித்த வரலாறுகாணாத பொருண்மிய நெருக்கடிக் காலத்தில், பெருந்தோட்டங்களின் உரிமையாளர்கள் தமக்கு உதவிசெய்ய முன்வரவில்லை என்று அங்கு பணிபுரியும் தேயிலைத் தொழிலாளர்கள் கவலை தெரிவித்திருக்கிறார்கள். தமது வேலைக்குப் பொறுப்பான மேற்பார்வையாளர்கள் (கண்காணிமார்) தமது கூலியை ஒழுங்காகக் கொடுப்பதில்லை என்றும் தாம் கூலியைக் கேட்கும்போது, தம்மை ஏசுகின்றார்கள் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்திருக்கிறார்கள். தம்மிடம் பணம் மிகவும் சொற்பமாக இருந்ததன் காரணத்தினால் மூன்று நேரங்களும் தம்மால் உணவு உண்ண முடியவில்லை என்றும் தமது பிள்ளைகளையும் வேலைக்கு அனுப்ப நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் அவர்கள் மேலும் கூறியிருக்கின்றனர்.



சிறீலங்காவின் மத்திய மலைநாட்டில் உள்ள சில தேயிலைத் தோட்டங்களில் தாம் செய்துவந்த தேயிலைத் தோட்டங்களில் 3 இலட்சம் தொழிலாளர்கள் தொழில்புரிந்து வருகிறார்கள். 2022ம் ஆண்டில் தேயிலைத் தோட்டத்துறை 1.079 பில்லியன் பவுண்டுகளை ஏற்றுமதி வருமானமாகப் பெற்றிருந்தது. "நாங்கள் 22 அல்லது 23 நாட்கள் வேலைசெய்தால் எல்லாக் கழிவுகளும் போக கிட்டத்தட்ட 15 அல்லது 16 நாளுக்கான கூலி தான் எமக்கு கடைசியாகக் கிடைக்கும்."



2021ம் ஆண்டில் இரசாயன உரவகைகளுக்கு அரசு தடைசெய்ததைத் தொடர்ந்து, முழுநாடும் வரலாறுகாணாத ஒரு பாரிய பொருண்மிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. இதன் காரணமாக தேயிலை உற்பத்திகள் கணிசமான அளவு குறைய, 26 வருடங்களில் காணாத அளவுக்கு தேயிலைப் பொருட்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. இந்த சூழ்நிலையைத் தொடர்ந்து தேயிலைத் தொழிலாளர்களின் அன்றாட வாழ்வு கேள்விக் குறியாக மாறியிருக்கிறது. தேயிலைத் தொழிலாளர்கள் ஒரு நாளில் 18 கிலோகிராம் நிறையுள்ள கொழுந்தைப் பறித்தால் அவர்களுக்கு 1000 ரூபா நாட்கூலி கிடைக்கும். 2021ம் ஆண்டு அரசாங்கத்தின் சம்பளத் திணைக்களம் இந்தச் சம்பளத்தை நிர்ணயித்தது. 18 கிலோ கிராமுக்குக் குறைய அவர்கள் பறித்தால், குறையும் ஒவ்வொரு கிலோ கிராமுக்கும் சம்பளம் குறைக்கப்படும். ரூபாவின் பெறுமதி கணிசமான அளவு குறைந்ததன் காரணத்தினால், கடந்த 24 மாதங்களில் கணிசமான அளவு குறைந்து, 2023ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 3.90 பவுண்டிலிருந்து 2.20 பவுண்டாகக் குறைந்தது. உலக நாணய நிதியத்தால் சிறீலங்காவுக்கு வழங்கப்பட்ட நிதியுதவியின் காரணமாக பெறுமதி 2.60க்கு உயர்ந்தது. ஆனால் கடந்த செப்ரெம்பரில் 86

லாளர்களில் ஒருவரான லக்ஸ்மன் தேவநாயகி தெரிவித்திருக்கிறார்.

தேயிலைத் தோட்டங்களில் வாழும் 44 வீதமான குடும்பங்கள் தமது நாளாந்த உணவைப் பெறத் திண்டாடுவதாக கடந்த ஜனவரி மாதம் உலக உணவுத் திட்டம் கணிப்பீட்டை மேற்கொண்டது. நகரங்களில் வாழும் குடும்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது இரட்டிப்பானதாகும்.

மேற்பார்வையாளர்களில் சிலர் தமக்குரிய ஊதியத்தை விடக் குறைவாகவே கொடுப்பதாக தொழிலாளர்கள் முறையிட்டனர். நாங்கள் நல்ல தேயிலைக் கொழுந்தைப் பறித்தாலும் கூட, அது சரியில்லை என்று சொல்லி கொழுந்தின் அளவை அவர்கள் குறைத்து எமது சம்பளத்தையும் குறைத்தே தருவார்கள் என்று 33 வயது நிரம்பிய தேவநாயகி எமக்குச் சொன்னார்.

5 கிலோ கிராம் நிறையுள்ள தேயிலைக் கொழுந்தை நாங்கள் அவர்களுக்குக் கொடுத்தால், 2 அல்லது 3 கிலோ கிராமுக்கான பணத்தையே அவர்கள் எமக்குக் கொடுப்பார்கள். இதுபற்றி அவர்களிடம் நாம் கேட்கும் போது, "எங்களுக்குச் சொல்லப்பட்டது போல நாங்கள் செய்கிறோம். நாங்கள் சொல்லுகிறதை நீங்கள் செய்யுங்கள்" என்று சொன்ன தேவநாயகி, சிலவேளைகளில் தற்கொலை எண்ணங்கள் கூட எனக்கு ஏற்பட்டதுண்டு என்று மேலும் கூறினார்.



ரெங்கசாமி புவனேஷ்காந்தி தனது கணவருடனும் மூன்று பிள்ளைகளுடனும் ஒரு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# இடையூறாகும் இனவாதம்

துரைசாமி நடராஜா

ஒரு சமூகம் பல்வேறு துறைகளிலும் மேலெழும்புவதற்கும், உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் ஐக்கியம் முக்கிய மானதாக விளங்குகின்றது.பல மட்டங்களிலும் எதிரொலிக்கும் ஐக்கியமானது சாதக விளைவு களுக்கு அடித்தளமாக அமையும்.இந்த வகையில் மலையக சமூகத்தின் எழுச்சியில் ஐக்கியமின்மை தாக்கம் செலுத்துவதாக பலரும் கருத்துகளை வெளிப்படுத்தி வரு கின்றமை தெரிந்ததாகும்.இதில் குறிப்பாக அரசியல், தொழிற்சங்கவாதிகளின் ஐக்கியமற்ற செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாகவே விமர்சனங்கள் இருந்து வருகின்றன.இதனி டையே தற்போது மலையக அரசியல், தொழிற்சங்கவாதிகள் பேதங்களை மறந்து மக்களின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு குரல்கொடுக்கப் போவ தாக தெரிவித்துள்ளமை ஒரு வரவேற்கத் தக்க விடயமாக பலரா லும் பேசப் பட்டு வருகின்றது. இந்த நல்ல சகுனம் தொடர்ந்தும் நிலைபெற வேண்டும் என்பதே பலரினதும் எதிர்பார்ப்பாகும்.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து இவ்வருடத்துடன் 200 வருடங்கள் பூர்த்தியாகின்றமை ஒரு முக்கிய விடயமாகும். இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சம் உள்ளிட்ட பல காரணிகள் இம்மக்களின் இடப்பெயர்வுக்கு பிரதான காரணமாக அமைந்தன. 1876 - 78 இல் ஏற்பட்ட பஞ்சம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே மிகவும் கொடியதாக பலராலும் மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பஞ்சத்தால் தஞ்சாவூர் மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது.சுமார் 40 இலட்சம் பேர் வரை பஞ்சத்தால் உயிரிழந்ததாக தகவல்கள் வலியுறுத்துகின்றன.சராசரியாக ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு 22 மாதங்களுக்கு நாளாந்த பஞ்ச நிவாரணம் வழங்க வேண்டிய நிலை உருவானது.பஞ்சம் மக்கள் தொகை அதிகரிப்பு வீதத்தை குறைத்தது. இப்பஞ்சத்தால் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களின் தொகையைக் காட்டிலும் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தவர்களின் தொகை மிகவும் அதிகமாகுமென்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.இந்தியாவின் தமிழகத்தில் இருந்து பல்வேறு காரணங்களால் உலகின் பல நாடுகளுக்கும் தீவுகளுக்கும் இடம்பெயர்ந்தவர் கள் எதிர்நோக்கிய துன்ப துயரங்கள் சொல்லி லடங்காது.



பலவிதமான சுரண்டல்களுக்கும் கொடுமைகளுக்கும் உள்ளான இவர்கள் அடி மைகளைப்போல் நடாத்தப்பட்ட வரலாறு துன்பகரமானதாகும்.தமிழகத்தில் இருந்து அழைத்துவரப்பட்டு வெளிநாடுகளிலும், தீவு களிலும் குடியேற்றப் பட்ட தமிழ்த் தொழி லாளர்களில் பலர் இன்று தமிழ் பேசவோ, எழுதவோ தெரியாத நிலையிலேயே வாழ்ந்து வருவதோடு அதிகளவில் சுதேச இனத்தவர் களுடன் கலப்புற்று விட்ட தாகவும் கலாநிதி அருணாசலம் சுட்டிக்காட்டி இருக்கின்றார். மேலும் அவ்வாறு கலப்புற்ற நிலையில் அவர்கள் பெருமளவு உரிமைகளுடனும் சலுகைகளுடனும் ஓரளவு வளத்துடனும் வாழ்ந்து வருகின்றனர். தொழிலாளர்களில் கணிசமானவர்களின் இளந் தலைமுறையினர் கல்வி கற்று பிற வேலை வாய்ப்புக்களைப் பெற்று முன்னேறத் தொடங்கி யுள்ளனர் என்பதும் அவரின் கருத்தாகவுள்ளது. இந்நிலையில் இலங்கை வாழ் மலையக மக்கள் தொடர்பில் நாம் நோக்குகையில் அம் மக்கள் இன்னும் அடிப்படை தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படாத நிலையில் மிகவும் இக்கட்டான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றமை தெரிந்ததாகும்.குடியிருப்பு, சமூக நிலைமைகள், தொழில்வாய்ப்பு, பொருளாதாரம், கல்வி என்று சகல துறைகளிலும் இம்மக்கள் பின்தங்கிய நிலைமையினையே கொண்டுள்ளனர்.

இம்மக்களின் அபிவிருத்தி கருதி அரசியல் தொழிற்சங்கவாதிகள் குரல் கொடுத்து வருகின்றபோதும் உரிய சாதக விளைவுகள் இன்னும் எட்டப்படவில்லை. ஆட்சியாளர்கள் இம்மக்களின் வாக்குகளின் மீது காட்டும் அக்கறையை இம்மக்களுக்கு உரிய சேவைகளை பெற்றுக் கொடுப்பதில் காண்பிக்கவில்லை என்பது வருந்தத்தக்க விடயமாகும். “ யானைப்பசிக்கு சோளப்பொரி” என்ற ரீதியில் அவ்வப்போது சிற்சில உதவிகள் இம்மக்களுக்காக வழங்கப்படுகின்றதே தவிர இதயசுத்தியுடன் இம்மக்களின் பிரச்சினை களுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க ஆட்சியாளர்கள் முன்வருவதில்லை என்பது கசப்பான உண்மையாகும்.பெரும்பான்மை அரசியல்வாதிகள் கூட ஆட்சியாளர்களின் இந்த ஓரவஞ்சனையையும், நியாயமற்ற தன் மையையும் கண்டித்துப் பேசி வருகின்றனர். “இலங்கையர்” என்ற பொதுவரையறைக்குள் மலையக மக்கள் நோக்கப்படாது இனத்தை முன்னிலைப்படுத்தி ஓரங்கட்டப்பட்டு வருவ தாக கண்டனக் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. இனவாத சிந்தனையாளர்கள் இந்நாட்டை குட்டிச்சுவராக்கிய வரலாறு கொடுமையானது. இதனால் ஏற்பட்ட தழும்புகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை.சர்வதேசத்தின் மத்தியில் இதனால் தலைகுனியும் நிலைமையும் ஏற் பட்டது..நிலைமை இவ்வாறிருக்கையில் இன வாதிகள் இன்னும் திருந்தியதாக இல்லை. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இனவாதம் சிறுபான்மை மக்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இடையூறாக உள்ளது.இந்த வகையில் மலையக மக்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இத்தகைய இனவாதப் போக்குகளும் தடைக்கல்லாக உள்ளன என்பதனை மறுப்பதற்கில்லை.

## பொது இணக்கப்பாடு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலைய கத்தின் தனிப்பெரும் கட்சியாக ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தது.அமரர் தொண்டமான் அரசியலில் “கிங் மேக்கராக “ விளங்கினார். ஆட்சியில் அமரப்போகும் அரசினை தீர்மா னிக்கும் வல்லமை அவருக்கிருந்தது.பேரம் பேசும் சக்தியை மையப்படுத்தி ஆட்சியாளர் களை வலியுறுத்தி பல்வேறு உரிமைகளையும் மலையக மக்களுக்கு பெற்றுக் கொடுக்க அவர் முனைந்தார்.இது சாதக விளைவுகள் பல வற்றுக்கும் உந்துசக்தியானது என்பதையும் மறுப்பதற்கில்லை.எனினும் பிற்காலத்தில் இனவாதிகளின் கண்களை இது உறுத்திய நிலையில் அவர்கள் தங்களுக்குள் ஐக்கியத்தின் ஊடாக பலத்தை உருவாக்கிக் கொண்டு பேரம்பேசும் சக்தியை மழுங்கடிக்கச் செய்வதில் வெற்றி கண்டனர்.இதனால் தொழிலாளர்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் தேக்க நிலை ஏற்பட்டது.

இது ஒரு புறமிருக்க மலையக அரசியல் தொழிற்சங்கவாதிகளின் ஐக்கியமற்ற போக்கு கள், விரிசல் நிலை என்பனவும் மலையக மக்களின் உரிமைகளுக்கு ஆப்பு வைத்து வருவதாகவும் கருத்து வெளிப்பாடுகள் இருந்து வந்தன. ஆட்சியாளர்கள் இவ்விரிசல் நிலையை சாதகமாக்கிக் கொண்டு பிரித்தாளும் கொள்கையை முன்னெடுத்து மலையக சமூ கத்தை வேரறுத்து வருவதாகவும் விசனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. இதில் உண்மை இல்லாமலும் இல்லை. மலையகக் கட்சிகள் ஆளுக்கொரு பக்க மாக இழுத்துக் கொண்டு சுயநலனை மையப்படுத்திகாய் நகர்த்தல்களை மேற்கொண்டன. இது தொழிலாளர்களின் ஒற்றுமையை சீர்குலைத்ததோடு அவர்களின் நலன்களை யும் கேள்விக்குறியாக்கியது.இந்நிலையில் மலையக அரசியல் தொழிற் சங்கவாதிகள் ஐக்கியத்துடன் செயற்பட வேண்டியதன் அவசியமும் பலராலும் வலியுறுத் தப்பட்டது. வடக்கு கிழக்கு அரசியல் வாதிகள் தமக்கிடையே கருத்து வேறுபாடுகள் காணப் படுகின்ற போதும் பொதுவான விடயங்களில் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதாகவும், அத் தகைய ஒன்றிணைவு மலையக அரசியல் வாதிகளிடையேயும் எதிரொலிக்க வேண்டு மென்றும் பலரும் வேண்டிக் கொண்டனர்.



இந்நிலையில் மலையக கட்சிகள் தமது கருத்து முரண்பாடுகளை புறந்தள்ளிவிட்டு சமூக நலனுக்காக இப்போது குரல் கொடுக்க துணிந்திருக்கின்றன.இது ஒரு நல்ல சகுனமாகும் என்பதோடு எதிரணியினருக்கு இது ஒரு சாட்டை அடியாகவும் அமையும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்..அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் எதுவாக இருந்தாலும் சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் பயன்படுத்துவதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தயங்காது.மலையக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பில் பேச்சு வார்த்தை நடத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவுடன் ஆயத்தமாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்திருக்கின்றார். இதேவேளை மலையகத்தின் தொழிற்சங்க நிலைமைகள் தற்போது அதிருப்தியான வெளிப்பாடுகளைக் கொண்டுள்ளன.தொழிற்சங்கங்கள் இலக்கு மாறிச் செயற்படுகின்றன.எனவே தொழிற் சங்கங்கள் தனது பிழைகளை திருத்திக் கொண்டு முன்செல்லவில்லையாயின் தொழிற் சங்க கலாசாரம் வலுவிழக்கும் சூழ்நிலை உருவாகும்.தொழிலாளர்களுக்கு இது ஒரு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சிறைக்கைதிகளால் தோற்கடிக்கப்பட்ட ஐரோப்பாவின் மிகச் சிறந்த இராணுவம்




வேல்ஸ் இல் இருந்து அருஸ்

உக்ரைன் களமுனையில் கடந்த சில வாரங்களில் மிக முக்கிய திருப்பங்கள் நிகழ்ந்துள்ளன. கிழக்கு உக்ரைனின் டொனஸ்க் பகுதியில் உள்ள பக்மன்ட் பகுதியை ரஸ்யா கைப்பற்றியுள்ளது. 72,000 மக்கள் தொகையை கொண்ட இந்த பகுதி உக்ரைனின் விநியோக வழிகளுக்கான முக்கிய பகுதியாகும்.

இங்கு கடந்த வருடம் செப்ரம்பர் மாதம் உக்கிரமடைந்த சமர் ஏறத்தாள 10 மாதங்களின் பின்னர் கடுமையான இழப்புகளுடன் முடிவடைந்துள்ளது.




இந்த சமரில் ரஸ்யா தனது படையினரை அதிகம் ஈடுபடுத்தவில்லை. தனியார் கூலிப் படையான வெக்னர் குழு என்ற குழுவையே பயன்படுத்தியுள்ளது. இந்த குழுவின் தலைவர் பிரிகோசின் என்பவர் முன்னர் உணவு விடுதி நடத்தியவர் பக்மன்ட் பகுதியில் சமரில் ஈடுபட்ட அவரது படையணியில் இருந்த 60,000 படையினரில் 50,000 பேர் ரஸ்யாவில் உள்ள சிறைகளில் இருந்து திரட்டப்பட்ட குற்றவாளிகள்.



மறு தரப்பில் நேட்டோவினால் பயிற்சி அளிக்கப்பட்ட நேட்டோவின் ஆயுதங்களை கொண்ட 150,000 மேலான உக்ரைன் வீரர்கள். ஆனால் 10 மாதங்கள் நடைபெற்ற சமரின் முடிவில் 31 நாடுகளை கொண்ட நேட்டோ கூட்டணியை உணவு விடுதி உரிமையாளர் தலைமையிலான சிறைக் கைதிகள் முறியடித்துள்ளது மிகவும் ஆச்சரியமானது என்கிறார் கிழக்கு ஐரோப்பிய படைத்துறை ஆய்வாளர் ரெலர் டுடீன்.

இந்த சமரில் 50,000 இற்கு மேற்பட்ட உக்ரைன் படையினர் கொல்லப்பட்டதுடன், 70,000 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். மேலும் 10,000 பேர் கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். வெக்னர் குழுதரப்பில் 10,000 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன், 12,000 காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த களமுனைக்கு அனுப்பப்படுபவர்களின் ஆயுட்காலம் 4 மணிநேரமே என்பதும் மிகவும் ஆச்சரியமாக பேசப்பட்ட விடயம்.

யப்பானில் இடம்பெற்ற ஜீ-7 பொருளாதார கூட்டமைப்பின் மாநாட்டில் உக்ரைன் அதிபர் பங்குபற்றிய சமயம் கடந்த 20 ஆம் நாள் பக்மன்ட் பகுதியை கைப்பற்றியதாக வெக்னர் குழு அறிவித்ததும் நேட்டோவுக்கு கிடைத்த பின்னடைவாகவே பார்க்கப்படுகின்றது.

1980 களின் பின்னர் இடம்பெற்ற மிக நீண்ட மற்றும் அதிக உயிரிழப்புகளை கொண்ட சமர் இதுவாகும். இந்த சமரை தொடர்ந்து வெக்னர் குழுவின் தரமும் உயர்ந்துள்ளது. அவர்கள் சொந்தமாக ஆட்லறி பீரங்கிகள், தாக்குதல் விமானங்கள், தாக்குதல் உலங்குவானூர்திகள் மற்றும் செய்மதிகளையும் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பக்மட் களமுனை பாதகமான களமுனை அங்கு சமரில் ஈடுபடுவது என்பது உக்ரைன் படையினருக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்ட கருத்துகளை உக்ரைனும், மேற்குலகமும் ஏற்கவில்லை. அங்கு 2014 ஆம் ஆண்டில் இருந்து நேட்டோ நாடுகளால் பயிற்சி கொடுக்கப்பட்ட ஏறத்தாழ 5 டிவிசன்களை தற்போது உக்ரைன் இழந்துள்ளது. இது அவர்களின் படை பலத்தில் கணிசமான தாக்கமாகும்.



கடந்த வருடம் கேர்சன் பகுதியில் உக்ரைன் ஒரு வலிந்த தாக்குதலை மேற்கொள்ள முற்பட்ட சமயம் ரஸ்யா தனது படையினரை ஆற்றின் மறுகரையை நோக்கி உள்வாங்கியிருந்தது. அந்த பின்வாங்கலை அவர்கள் தோல்வியாக கருதவில்லை. 30,000 படையினரை காப்பாற்றிய வெற்றியாகவே கருதினார்கள்.

பக்மன்ட் களமுனை என்பது உக்ரைனின் படை பலத்தை அழிப்பதற்கு ரஸ்யா வைத்த பொறி என இந்த வருடத்தின் ஆரம்பத்தில் பல படைத்துறை அவதானிகள் தெரிவித்திருந்தனர். எனவே அங்கிருந்து படையினரை பின்வாங்க செய்வதன் மூலம் உக்ரைன் தனது படை பலத்தை தக்கவைக்கலாம் எனவும் அவர்களை வேறு ஒரு சாதகமான களமுனையில் தாக்குதலுக்கு பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் மேற்குலகத்திடம் இருந்து பணத்தையும், ஆயுதங்களையும் பெறுவதற்கு களமுனையில் ஒரு முன்னேற்றம் தேவை என்பதை நினைத்து அவர்கள் பாதகமான களமுனையை தேர்ந்தெடுத்ததே இந்த அழிவுக்கான காரணம்.

ஐரோப்பாவில் உள்ள படையினரில் உக்ரைன் இராணுவம் மிகவும் தரம் வாய்ந்தது என கருதப்படுகின்றது. அவ்வாறு தரம்வாய்ந்த படையினருக்கு ஆயிரக்கணக்கான கவச வாகனங்கள், 2 மில்லியன் எறிகணைகள், 9,000 ஏவுகணைகள், பெருமளவான வான் எதிர்ப்பு சாதனங்கள், நேட்டோவின் செய்மதி உளவு தகவல்கள், நேட்டோ படை அதிகாரிகளின் வழிநடத்தல்கள் எல்லாம் வழங்கப்பட்ட போதும் பக்மட் பகுதியை அவர்கள் இழந்தது உலக நாடுகளில் மிகப்பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது.



இந்த தோல்வியில் இருந்து மீளவதற்காக அல்லது அந்த செய்தியை மறைப்பதற்காக உக்ரைனுக்கு உடனடியான ஒரு தாக்குதல் வெற்றி தேவைப்பட்டது. அதற்காக அவசரமான திட்டம் ஒன்று தீட்டப்பட்டது அதாவது ரஸ்யாவின் எல்லைக் கிராமம் ஒன்றை பதிலடியாக கைப்பற்றுவது. அதன் மூலம் ரஸ்யா பலவீனமானது என்பதை உலகிற்கு காட்டுவது தான் திட்டம். ஆனால் உக்ரைன் படையினருக்கு ஒன்று தெரியும் அதனை தக்கவைக்க முடியாது என்பது.

இந்த தாக்குதலுக்காக 130 சிறப்பு படையினர், இரண்டு டாங்கிகள், 1 துருப்புக்காவி வாகனம், 9 கவச வாகனங்களுடன் தாக்குதல் அணி நகர்ந்தது. அவர்களுக்கு ஆதரவாக மோட்டார் படையணி மற்றும் பீரங்கி படையணியினர் தாக்குதல் நடத்த தயாராக இருந்தனர்.



பெல்கொரோட் பகுதியை கைப்பற்றுவதே திட்டம், நகர்ந்த படையணி கிரைவோரன் பகுதியில் உள்ள காவல் நிலையை தகர்த்து இலகுவாக குளோரோஸ்கி பகுதிக்குள் உள்நுழைந்துவிட்டது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## எமது மேலாளர்... தொடர்ச்சி ...

தேயிலைத்தோட்டத்துக்கு மேலே இருக்கின்ற மலைக்குன்றில் வசித்து வருகிறார். தங்கள் நாளாந்த உணவுக்காகத் தான் கடன் வாங்குவதாகவும், மூன்று நேரமும் உணவு உண்ணும் வாய்ப்பு தங்களுக்குக் கிடைப்பதில்லை என்றும் தனது பிள்ளைகளுக்கு உணவை வாங்கும் பொருட்டு மாதவிடாய் காலத்தில் தான் வாங்கும் துணிகளை வாங்குவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

''வீட்டிலே உணவு இல்லாத நேரங்களில் வேலைக்கு எந்த உணவையும் நான் எடுத்துச் செல்வதில்லை. நான் வீட்டுக்குப் போயிற்று வருகிறேன் என்று கண்காணிமாருக்கு நான் சொல்லிவிட்டு வருவேன். ஏனென்றால் மற்றவர்கள் சாப்பிடும் போது என்னால் அதனைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது'' என்று புவனேஷ்காந்தி தனது நிலைபற்றித் தெரிவித்தார்.

“மிகவிரைவாகக் கொழுந்து பறிக்க வேண்டி இருப்பதால், ஈரலிப்பான சூழலில் அதிகமாகக் காணப்படும் அட்டைகள் (leech) காலில் ஏறுகின்ற போது, அவற்றைப் பிடுங்கி எறிய முடியாது. அவ்வாறான ஒரு அட்டை கடித்த படியால் கடந்த வருடம் அவரது காலில் தொற்று ஏற்பட்டது. அந்த நேரம் ஒரு மணித்தியாலம் கால்நடையாக நடந்து மருத்துவரைப் பார்க்க வேண்டியிருந்தது. காரணம் முச்சக்கரவண்டியில் செல்வதற்கான பணம் என்னிடம் இருக்கவில்லை.''

“ஒவ்வொரு முறையும் அட்டை கடிக்கும் போது, அதனைப் பிடுங்கி எறிய நாம் முற்பட்டால் நாம் பறிக்கும் கொழுந்தில் ஒரு கிலோ குறையும். வேலை செய்யும் போது அப்படித் தான் நாங்கள் சிந்திப்போம்'' என்று புவனேஷ்காந்தி சொன்னார்.

## இலங்கையில் அணு ... தொடர்ச்சி...

இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அணு மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான திட்டத்திற்கு அனுமதி வழங்கப்படுமாயின், அதற்கு தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்க தமது நாட்டு அதிகாரிகள் தயாராகவுள்ளதாக ரஷ்ய தூதுவர் கூறியுள்ளார்.

இதற்கு தேவையான எந்தவொரு கலந்துரையாடலுக்கும், விசேட நிபுணர்களின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுக்கவும் தயாராகவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 19 ஆண்டுகள் ... தொடர்ச்சி ...

ஊடகத்துறைக்கு தன்னை அர்ப்பணித்த தந்தையை இழந்து துடிக்கும் பிள்ளைகளுக்கும், கணவனை இழந்து துயரப்படும் அவரது மனைவிக்கும், நல்ல ஒரு ஊடக நண்பனை இழந்து துடிக்கும் சக ஊடக நண்பர்களுக்கும் மீண்டும் ஒரு தடவை ஆழந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

## பிரித்தானியாவுக்கு ... தொடர்ச்சி...

அனுமதி யாக மாற்றும் நடைமுறையும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடை முறைப் படுத்தப்படவுள்ளது. கடந்த ஆண்டு பிரித்தானியாவுக்குள் ஐரோப்பியர்கள் அல்லாத 486,000 மாணவர்கள் வந்துள்ளனர். 2019 ஆம் ஆண்டு அதன் எண்ணிக்கை 269,000 ஆகும். கடந்த ஆண்டு மாணவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 136,000 பேர் வந்துள்ளனர். 2019 ஆம் ஆண்டு 16,000 பேர் மட்டுமே வந்திருந்தனர்.

இந்த சடுதியான அதிகரிப்பை கட்டுப்படுத்தும் நேரம் வந்துள்ளதாகவும், பிரித்தானியாக்குள் குடிபெயரும் மக்களின் எண்ணிக்கையை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குள் வைத்திருக்க வேண்டும் எனவும், இந்திய வம்சாவளியை சேர்ந்த பிரித்தானியாவின் உள்துறை அமைச்சர் சூயலா பிரவேர்மன் தெரிவித்துள்ளார்.

உண்மையில் என்ன செய்வது என்று எங்களுக்குத் தெரியவில்லை. தோட்டத்தில் நாங்கள் வேலை செய்கிறோம். ஆனால் எங்களுக்குச் சம்பளம் இல்லை. அப்படியென்றால் நாங்கள் என்ன செய்யலாம்?

தாங்கள் மிகவும் மோசமான சூழ்நிலைகளில் வாழ்வதாகத் தேயிலைத் தொழிலாளர்கள் தெரிவிக்கிறார்கள். மலம் கழிப்பதற்கு அருகில் உள்ள ஆற்றைத் தேடிச் செல்வதாக அவர்கள் சொல்கிறார்கள்.

தோட்டத்தில் வேலை செய்யும் எங்களை மனிதாபிமானமற்ற வகையில் நடத்துகிறார்கள். மேலாளர்கள் சொகுசாக வாழ்வதற்காக நாங்கள் எங்கள் இரத்தத்தைச் சிந்துகிறோம் என்று 40 வயது நிரம்பிய சுப்பிரமணியம் சத்தியவதனி என்ற தொழிலாளி கூறினார்.

அரசாங்கத்திடமிருந்து குத்தகைக்கு நிலம் எடுக்கின்ற கம்பனிகளால் தேயிலைத் தோட்டங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. அந்தத் தோட்டங்களில் வேலை செய்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் மலையகத் தமிழர்கள். பிரித்தானிய காலனீய ஆட்சிக்காலத்தில் தென் இந்தியாவிலிருந்து ஒப்பந்த வேலைக்காக அழைத்துவரப்பட்டவர்களின் வாரிசுகள். பிரித்தானியர்களின் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட சின்னஞ்சிறிய வீடுகளிலே தான் இன்னும் பலர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த வீடுகள் அனைத்தும் இப்போது பெருந்தோட்டங்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன.

பலருக்குத் தண்ணி வசதியோ அல்லது மலசலகூட வசதியோ கிடையாது. அருகிலிருக்கும் ஆறுகளுக்கு அருகாமையில் மலங்களிக்க வேண்டியிருப்பதாக தொழிலாளர்கள் கூறினார்கள்.

## தமிழர்களையும் ... தொடர்ச்சி...

முனை, அம்பாறை பகுதிகளைச்சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருட்டிண மிசன் பாடசாலை வளவினுள்ளும் 1990 சூன் மாதம் முதல் சூலை மாதம் வரை தஞ்சம் புகுந்திருந்தனர்.

இக்காலகட்டத்தில், 1999,ஆகத்து 12ம் நாளன்று இவற்றினுள் புகுந்த முஸ்லீம் ஊர்காவல்படைக் கும்பல் ஒன்று 400க்கும் அதிகமான பொதுமக்களை சுட்டும் வெட்டியும் தாக்கினர். இவர்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 55 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அதிகமானோர் படுகாயமுற்றனர். அவ்வேளையில் கடத்தப்பட்டோர் பற்றி எவ்விதத் தகவலும் இல்லை.

**தொடரும் ...**

## ஆசியாவுக்குள் ... தொடர்ச்சி ...

வரலாறு ஏனைய நாடுகளை சினங்கொள்ள வைக்கும் வரலாறாகும். ஆனால் அவர்கள் தமது பிராந்தியத்தில் அமைதியையும், உறுதித்தன்மையையும் பேணும் நடவடிக்கைகளை பேண வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, யப்பானில் நேட்டோவின் அலுவலகம் திறப்பதற்கான பேச்சுக்கள் இடம்பெறுவதை யப்பானின் பிரதமர் புமியோ கிசிடா கடந்த புதன்கிழமை (24) யப்பான் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் யப்பான் நேட்டோவில் இணையாது என அவர் தெரிவித்துள்ளார்.

நேட்டோவின் கடந்த வருட கூட்டத் தொடரில் முதல் முறையாக இந்தோ-பசுபிக் நாடுகள் அழைக்கப்பட்டிருந்தன. யப்பான், தென்கொரியா, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் எதிர்வரும் ஜூலை மாதம் இடம்பெறும் கூட்டத்தொடரில் கலந்துகொள்ளவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பாம்புகளுக்கும் தண்ணியில் இருக்கும் அட்டைகளுக்குப் பயந்தும் தான் பல தடவைகள் மலங்கழிக்கச் செல்வதில்லை என்று புவனேஷ்காந்தியின் மூத்த மகன் கூறினார். அசுத்த நீரை அருந்தியதன் காரணத்தால் தனது கணவன் இறந்ததாக இன்னொரு பெண் சொன்னார்.

பெருந்தோட்டங்களில் இருப்பதற்கு அவர்கள் கட்டாயப்படுத்தப்படாத போதிலும், தேயிலைத் தொழிலாளர்களுக்கு அந்தப் பிரதேசங்களில் வேறு வகையான வேலைவாய்ப்பு எதுவும் கிடைப்பதில்லை. அதுமட்டுமன்றி அவர்களில் பலர் அதிகமான கல்வியறிவைப் பெற்றிருக்கவில்லை.

அந்தக் கிராமச் சூழலில் தேயிலைத் தொழிலாளர்களுக்கு அதிகமான தெரிவு இல்லை. தோட்டத்தால் வழங்கப்படும் சிறிய சலுகைகளான பிள்ளைகள் பராமரிப்பு போன்ற வசதிகளை அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். இதற்கான செலவு அவர்களது சம்பளத்திலிருந்து கழிக்கப்படுகிறது. மாதாந்தம் 50 வீதம் அல்லது அதற்குஅதிகமாகசம்பளம்கழிக்கப்பட்டவர்களின் சம்பளச்சீட்டுகளைப் பார்க்கும் வாய்ப்பு காடியனுக்குக் கிடைத்தது.

கடந்த வருடம் ஒரு தடவை தனது சம்பளத்திலிருந்து எல்லாச் செலவுகளும் கழிக்கப்பட்டதன் காரணத்தால் தனது செலவுக்கென்று எதுவும் மிஞ்சியிருக்கவில்லை என்று புவனேஷ்காந்தி தனது நிலைபற்றி மிகவும் கவலையுடன் கூறினார்.

***நன்றி: theguardian.com***

## இடையூறாகும் ... தொடர்ச்சி...

அபாய அறிவிப்பாகும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். தொழிற்சங்கவாதிகள் தொழிற்சங்கத்தின் ஊடாக அரசியலுக்கு செல்லும் காய்நகர்த்தலை மேற்கொள்வதால் தொழிலாளர் உரிமைகள் புறக்கணிக்கப்படுவதாகவும் ஒரு குற்றச்சாட்டு உள்ளது.இதனிடையே மலையகத்தின் தொழிற்சங்கக் கட்டமைப்பை பலப்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை பாராளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் வலியுறுத்தி இருக்கின்றார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயமே தற்போது பெரிதாக பேசப்பட்டு வரும் நிலையில் அம்மக்களின் ஏனைய பிரச்சினைகள் மூடிமறைக்கப்பட்டு வருகின்றன.இது அநீதியான செயலாகும்.சம்பளப் பிரச்சினைக்கு அப்பால் இம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் இன்னும் அதிகமுள்ளன.இந்நிலையில் ஆட்சியாளர்களை வலியுறுத்தி இவற்றுக்கான திர்வினைப் பெற்றுக் கொடுக்க மலையக கட்சிகள் ஓரணியில் திரண்டிருக்கின்றன. இந்திய வம்சாவளி மலையக மக்களின் தேசிய அபிலாஷை கோரிக்கைகள் பல சிவில் சமூக கலந்துரையாடலில் இனங்காணப்பட்டு தேசிய சர்வதேச அரங்குகளில் முன்வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன முனைப்புடன் இச்செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் நிலையில் ஏனைய கட்சிகளும் மக்களின் நலன்கருதி இத்தகைய பொதுவான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வருதல் வேண்டும். கடந்த காலத்தில் மலையக மக்களின் மேம்பாடுகருதி தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டு மற்றும் பத்தாண்டு திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ள நிலையில் சமகால கோரிக்கைகளை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து நிறைவேற்றிக் கொள்ள அனைத்து கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியம் என்பதனை மறந்து விடுதல் கூடாது.

• • •

### நவகாலனித்துவ... தொடர்ச்சி ...

அரசியல் பிரதிநிதித்துவ வீழ்ச்சியானது அச் சமூகத்தின் அபிவிருத்தியை பல்வேறு வழிகளிலும் தடைப் படுத்தும் என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இவ்வாறாக பல வழிகளிலும் 1972 ம் ஆண்டின் குடியரசு யாப்பு சிறுபான்மையினரின் வாழ்வில் தாக்க விளைவுகள் பலவற்றையும் ஏற் படுத்தி இருந்தது.

**கேள்வி:**

**தன்னாட்சி உரிமைகளை பயன்படுத்த முடியாத எல்லைகளில் வாழும் மக்களாக தமிழ் மக்கள் உள்ளனர்.இந்நிலையில் ஐக்கிய நாடுக ளின் சிறப்பு பிரதிநிதியை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து உங்கள் கருத்து என்ன?**

**பதில்:**

மனித வாழ்வில் உரிமைகள் மிகவும் முக்கியமானவை.உரிமைகளின்றி எந்தவொரு மனிதனும் சிறப்பாக செயற்பட முடியாது என்பதும் புத்திஜீவிகளின் கருத்தாகும்.இந்த வகையில்" உரிமைகளை யாரும் தங்கத்தட்டிலே வைத்து வெறுமனே தந்துவிடப் போவதில்லை. போராடினால்தான் உரிமைகள் கிடைக்கும்" என்று கூறுவார்கள்.இந்த வகையில் நோக்குகையில் தன்னாட்சி உரிமைகளை பயன்படுத்த முடியாத வகையில் எல்லையில் வாழும் மக்கள் இருந்து வருவது புதிய விடயமல்ல.இம்மக்களின் இயல்பு வாழ்க்கை பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டு வருகின்றது.இவர்கள் இதிலிருந்து மீட்சி பெற்று சகல உரிமைகளையும் அனுபவிக்கும் வாய்ப்பு அல்லது சந்தர்ப்பம் உருவாக்கிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.ஆட்சியாளர்கள் இது குறித்து பூரண கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்."இலங்கையர்",என்ற பொதுவரை யறையுடன் செயற்பாடுகள் யாவும் முன்னெடுக் கப்படுதல் வேண்டும்.

இதேவேளை தொடர்ச்சியாக இம்மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு இயல்பு வாழ்க் கைக்கு இடையூறு காணப்படுகின்றபோது மாற்று வழிமுறை குறித்து சிந்திக்க வேண்டிய நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்படுகின்றனர். எனவே இத்தகைய ஒரு நிலைமையை மேலெழும்பவிடாது இதயசுத்தியுடன் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.சகல இனங்களும் ஐக்கியத்துடன் கை கோர்க்கும் நிலைக்கு வித்திடப்படுதல் முக்கியத்துவம் மிக் கதாகும்.இதனால் சாதக விளைவுகள் அதிகமாகும் என்றார்.

**நேர்கண்டவர்:- துரைசாமி நடராஜா**

### இலங்கையில் ஊழல் ... தொடர்ச்சி...

ஏற்படுத்தி யுள்ள நேர்மறையான தாக்கம் தொடர் பில் நினைவுகூற விரும்புகின்றேன்.

இலங்கைக்கும் அமெரிக் காவுக்கும் இடையிலான நல்லுறவானது மக்கள், வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்பு ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்ட நீண்டகால வரலாற் றைக் கொண்டிருக்கின்றது.

எமது இருநாடுகளும் சுமார் 7 தசாப் தகாலமாக பொருளாதார அபிவிருத்தி முதல் தேசிய பாதுகாப்பு வரை பல்வேறு விடயங்கள் தொடர்பில் மிகவும் விரிவாக ஒன்றிணைந்து பணியாற்றிவந்திருப்பதுடன் இருநாடுகளுக்கும் இடையில் வலுவான நட்புறவும் பரஸ்பர நன் மதிப்பும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

அதேவேளை வர்த்தகம் மற்றும் முதலீடு களை ஊக்குவித்ததன் மூலம் இருநாடு களுக்கும் இடையிலான தொடர்புகளை வலுப் படுத்துவதில் அமெரிக்க வர்த்தகப்பேரவையும் முக்கிய பங்காற்றியுள்ளது.

மேலும் இலங்கையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும், சாதகமான வணிகச்சூ ழலைக் கட்டியெழுப்புவதற்கும் ஏதுவான கொள்கைகளை உருவாக்குவதற்கான உத்வேகத் தையும் தற்போது இலங்கை அரசாங்கம் முன் னெடுத்துவரும் மறுசீரமைப்புக்கள் குறித்த ஆலோசனைகளையும் அமெரிக்க வர்த்தகப் பேரவை வழங்கியிருக்கின்றது.

இதனை முன்னிறுத்திய பணிகள் இன் னமும் நிறைவடையவில்லை. சிறந்த ஆட்சி நிர்வாகத்தை ஊக்குவிப்பதற்கும், ஊழல் மோசடி களை முடிவுக்குக்கொண்டுவருவதற்கும் மேலும் பல்வேறு விடயங்களைச் செய்ய வேண்டியுள் ளது" என்றார்.

### மகாவலி "ஜே"... தொடர்ச்சி ...

செயலர் பிரிவாக அது மாற்றப்பட்டிருக்கின்றது.

இதேபோல இந்தக் குடியேற்றங்களை உள்வாங்கிக்கொண்டு - இன்னும் 10 அல்லது 15 வருட காலத்தில் இந்த இடங்களுக்கு மிகப்பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கி அதன் மூலமாக சிங்கள மக்களை செழிப்பான ஒரு வாழ்க்கைக்குக் கொண்டு செல்வார்கள். இதுதான் அவர்களுடைய திட்டம். ஏற்கனவே சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்ற பகுதிகளில் இவ் வாறுதான் நடைபெற்றிருக்கின்றது.

**மாகாண சபை அதிகாரத்தில் இருந்திருந்தால், இவ்வாறான திட்டங்களைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியுமா?**

மாகாண சபை என்பது எங்களுக்கான முழுமையான ஒரு தீர்வல்ல. ஆனால், மாகாண சபை இருந்திருந்தால், இந்த இடங்கள் ஓரளவுக்கு காப்பாற்றப்பட்டிருக்கும். முழுமையாக என்று நான் சொல்லவில்லை. மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் போன்றன இருக்கவில்லை. காணி அதிகாரத்துடன் கூடியதாக மாகாண சபை இருக்குமாக இருந்திருந்தால், இவர்கள் இதில் கைவைக்க முடியாத ஒரு நிலை இருந்திருக்கும்.

அப்படியில்லாமல் முன்னர் எமது காலத்தில் இருந்ததைப்போல மாகாண சபை இருந்திருந்தாலும் சிலவற்றை செய்திருக் கலாம். அவ்வாறான நிலையில், இவ்வாறான குடியெற்றங்கள் சிலவற்றை தடுத்த நாங்கள். அதாவது, எங்களுடைய அதிகார மையமாக மாகாண சபை ஏதோ இயலக்கூடிய அதிகாரங்களுடன் இருந்தாலும் அதன் மூலமாக அதற்கிருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி சிலவற்றை நாம் தடுத்திருக்கக்கூடியதாக இருந்தி ருக்கும். ஆனால், முற்றுமுழுதான தீர்வாக நாம் அதனைச் சொல்லவில்லை.

• • •

### புதிய நாடாளு... தொடர்ச்சி ...

எதிர்க்கட்சிகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்றத்தில் இருந்து ஜனநாயகம் பறிக்கப் பட்டுள்ளது. எனவே இந்த கட்டிடம் பெறுமதியற்றது. மோடி ஜனநாயகத்தை தினமும் கொல்கின்றார். முன்னாள் அரசதலைவர் ராம்நாத் கோவிந்தை புறக்கணித்து கட்டிடத்திற்கான அடிக்கல்லையும் அவரே நாட்டியிருந்தார் என காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் சுப்பிரியா சிறீநாத் தெரிவித்துள்ளார்.

ஆனால் புதிய கட்டிடத்தின் திறப்பு விழாவை எதிர்க்கட்சிகள் அரசியல் மயப்படுத்து வதாக பாரதிய ஜனதா கட்சி தெரிவித்துள்ளது.

### வடக்கில் 37 ... தொடர்ச்சி ...

ஏன் கவனிக்கவில்லை.வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி விடுவிக்கப்படும் என சர்வதேசத்திடம் குறிப்பிட்டு விட்டு மகாவலி அதிகார சபை ஊடாக காணிகளை தொடர்ந்து கையகப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மகாவலி அதிகார சபையின் செயற் பாட்டை வன்மையாக கண்டிக்கிறோம்.அத் துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் இராணுவத்தினர் சகல பகுதிகளிலும் குடி கொண்டுள்ளார்கள். இராணுவ முகாம்களில் புத்தர் நிலை வைக்கப்படுகிறது,விகாரைகள் கட்டப்படுகிறது. தமிழர் பகுதியில் பௌத்த மயமாக்கல் தற்போது இராணுவ மயமாக் கபபட்டுள்ளது .இந்த நாட்டில் பல்லின சமூகத்தின் உரிமைகள் பெயரளவில் மாத்திரம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆட்சியாளர்களும் எமது விடயத்தில் பார்வையற்றவர்களாக உள்ளார்கள்.

இராணுவமயமாக்கல் ஊடாக பௌத்த மயமாக்கலையும்,மகாவலி அதிகார சபை ஊடாக சிங்கள பரம்பலை விரிவுப்படுத்தும் செயற்பாட்டையும் அரசாங்கம் உடனடியாக இடைநிறுத்த வேண்டும் என்றார்.

### சிறைக்கைதி ... தொடர்ச்சி ...

ஆனால் விரைவாக செயற்பட்ட ரஸ்யாவின் சிறப்பு படையினர் இரவோடு இரவாக உக்ரைன் படையினரை மேலும் நகராதபடி குளோரோஸ்கி பகுதிக்குள் முடக்கிவிட்டனர்.

செய்மதி உளவுத்தகவல்களின் மூலம் உக்ரைன் படையினரின் நடமாட்டங்களை அவ தானித்த ரஸ்யா, தனது எம்.ஐ-8 மற்றும் எம்.ஐ-24 வகை தாக்குதல் உலங்கு வானூர்திகளையும் பதில் தாக்குதலுக்கு பயன்படுத்தியிருந்தது. 12 மணிநேரத்திற்குள் உக்ரைன் படையனரின் நகர்வை முறியடித்த ரஸ்யா 24 மணிநேரத்திற்குள் தனது நடவடிக்கையை முடிந்துவிட்டது. இந்த பதில் நடவடிக்கையை ரஸ்யா படையினரின் கேணல் ஜெனரல் அலக்சான்டர் லிபின் வழிநடத்தி யிருந்தார்.

தோல்வியில் முடிந்த இந்த தாக்குதலில் உக்ரைன் படையினர் 70 பேர் கொல்லப்பட் டதுடன், பலர் காயமடைந்ததுடன், பலர் சிறைப் பிடிக்கப்பட்டனர். அமெரிக்க தயாரிப்பான இரண்டு M1224 MaxxPro கவச வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. இரண்டு HMMWV M1151A1 சேதமடைந்தன. HMMWV M1152A1துருப்புக்காவி வாகனம் அழிவடைந்தது, இவைதவிர போலந்து மற்றும் உக்ரைன் தயாரிப்பு கவசவாகனங்களும் அழிக்கப்பட்டன.

பல ஆயிரம் நீளமான ரஸ்யாவின் எல்லை பாதுகாப்பை மறுசீரமைக்க வேண்டிய நிலையை இந்த தாக்குதல் ரஸ்யாவுக்கு உருவாக்கியுள்ளது. அதற்கு ரஸ்யாவுக்கு அதிக படையினர் தேவைப் படலாம் என உக்ரைன் எண்ணுகின்றது. அதேசமயம், இந்த தாக்குதலில் அமெரிக்க ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதும், இந்த தாக்குதலை ரஸ்யா ஒரு பயங்கரவாத தாக்குதல் எனவும் 8 பொதுமக்கள் காயமடைந்ததாகவும் தெரிவித்துள்ளதும் அமெரிக்காவுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன் சமரில் ஒரு எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை என்பதால் மேற்குலகம் நீண்டதூர ஏவுகணைகள் மற்றும் எப்-16 வகை தாக்குதல் விமானங்களை வழங்கும் நிலைக்கு தற்போது சென்றுள்ளன. ஆனால் அவை களமுனையில் மாற்றத்தை ஏற்படுத்துவதை விட இந்த போரை மேலும் அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும் என்பது தான் உண்மை.

• • •

# வடமாகாணத்தில் முள்முருங்கு

## ஏன் அழிந்து போனது?

ஆர்த்ீகன்



முள்முருங்கை மரம் தமிழர்களின் கலாச்சாரத்துடன் ஒன்றிப்போன தாவரங்களில் ஒன்று. அதன் தாவரவியல் பெயர் *Erythrina variegate* என்பதாகும் ஆனால் அதனை இந்திய கரையோர மரம் அல்லது புலி நகம் போன்ற முள் உள்ள தாவரம் என்றும் அழைப்பதுண்டு. இது கிழக்கு ஆபிரிக்கா, இந்திய துணைக்கண்டம், மற்றும் வடக்கு அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வளரும் மரமாகும். இலங்கையின் வடபகுதியில் அதனை நாம் 2000 ஆம் ஆண்டு வரையிலும் மிக அதிகமாக பார்ப்பதுண்டு.



வேலிகளுக்கு கதியாலாக அதனை பயன்படுத்துவதுடன் விலங்குகளுக்கான பிரதான உணவாக அதன் இலை பயன்படுவதுண்டு. குறிப்பாக ஆட்டுக் கடா வளர்ப்பவர்களுக்கு விருப்பமான மரம். அதன் இலையில் உள்ள புரதம் ஆட்டு இறைச்சியை மென்மையாக்குவதால் அதனை கடா வளர்ப்பவர்கள் அதிகம் பயன்படுத்துவதுன்டு.

புண்ணாக்கு மடித்து தீத்துவதற்கும் அதன் இலையை தான் பயன்படுத்துவதுண்டு. இந்த மரங்களின் இலைகள் மற்றும் பட்டடைகள் மருத்துவ குணம் உடையதால் பல நாடுகளின் அதனை மக்கள் பயன்படுத்துவதுண்டு.

பிலிப்பைன்ஸில் அதன் இலையும், பட்டையும் மருந்துவ தேவைக்காக பயன்படுத்தப்படுவதுடன், வியட்னாமில் அதன் இலைகள் இறைச்சியை பதப்படுத்த பயன்படுத்தப்படுவதுண்டு. அதன் விதைகள் நச்சுத் தன்மை கொண்டதாக இருக்கும் போதும் அதனை சமைக்கும் போது நச்சுத்தன்மை அகன்றுவிடுவதால் சில நாடுகளில் உணவாகவும் பயன்படுவதுண்டு.



இலங்கையில் திருமண நிகழ்வுகளில் கன்னிக்கால் நடுகை விழாவுக்கு முள்முருங்கை மரமே பயன்படுத்தப்படுவதுண்டு. அது சில நூறு ஆண்டுகால வழக்கம். ஆனால் 2015 ஆம் ஆண்டு நான் இலங்கை சென்றபோது எமது வீட்டில் நின்ற முள்முருக்கை மரங்கள் எதனையும் காணவில்லை. எமது ஊரிலும் எந்த மரமும் தென்படவில்லை, அதன் பின்னர் தான் நான் பலரிடமும் அது தொடர்பில் வினாவிய போது வைரஸ் நோய் காரணமாக முள்முருங்கை மரங்கள் அத்தனையும் குடாநாட்டில் அழிந்துவிட்டதாக கூறினார்கள்.

அது மிகவும் ஆச்சரியமான விடயம் ஒரு இனம் அழிந்துவிட்டது என்றால் உயிரினப் பரம்பலில் (*Biodiversity*) அது மிகப்பெரும் தாக்கம். எமது சூழலில் எல்லா உயிரினங்களும் ஒன்றில் ஒன்று தங்கியே வாழ்கின்றன (*Interdependent*). எனவே ஒரு உயிரினத்தின் அழிவு என்பது பல உயிரினங்களை பாதிக்கும்.

வைரஸ் தாக்கினாலும் ஒரு இனத்தில் சில தப்பும் அது தான் சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கை கூறுகின்றது (*Natural Selection*). ஆனால் அந்த கூர்ப்புக் கொள்கை ஏன் எமது பிரதேசத்தில் பிழைத்துப்போனது என்ற கேள்வி எனக்குள். ஏன் இந்த இனம் முற்றாக அழிந்துபோனது என்ற எனது கேள்விக்கான பதிலை தேடியவாறு இப்போ கல்யாணவீட்டுக்கு கன்னிக்கால் நடுவதற்கு எந்த மரத்தை பயன்படுத்துகிறீர்கள் என அங்குள்ளவர்களிடம் வினாவினோன்.



முள்முருங்கைக்கு பதிலாக கல்யாண முருங்கை மரம் பயன்படுத்துவதாக கூறினார்கள். நான் அங்கு இருந்த காலத்தில் கல்யாண முருங்கையை பார்த்தது குறைவு ஆனால் அந்த மரம் அங்கு இப்போது பல இடங்களிலும் உள்ளது. எங்கிருந்து வந்தது? இந்தியாவில் இருந்தா? அதற்கான விடை என்னிடம் இல்லை.

முள்முருங்கை ஏன் அழிந்துபோனது என்பதற்கான விடையும் ஓரளவு தெரிய வந்தது. தாவரங்களில் இரு வகையான இனப்பெருக்க முறைகள் உண்டு. ஒன்று பூக்களின் மகரந்தமும் முட்டையும் சேருவதால் இனப்பெருக்கம் இடம்பெற்று விதைகள் உருவாகி அதில் இருந்து மரம் வளரும் (*Sexual Reproduction*). ஆனால் அதற்கு அதிக நேரம் எடுக்கும்.

இரண்டாவது தாவரங்களில் தண்டுகளை அல்லது தடிகளை (கதியால் என அதனை அழைப்பதுண்டு) வெட்டி மண்ணில் நடுவதால் அவை மரங்களாக வளரும் (*Asexual Reproduction*). ஆனால் இந்த முறையில் மரங்களை விரைவாக வளர்க்க முடியும். மனிதர்கள் எப்போதும் விரைவான பலனை தான் எதிர்பார்ப்பதுண்டு எனவே குடாநாட்டில் பெருமளவான முள்முருங்கை மரங்கள் கதியால்கள் மூலம் வளர்க்கப்பட்டவையே.

கதியால்களால் வளர்க்கப்படும் மரங்களில் உள்ள பிரச்சனை என்னவெனில் அவை எல்லாம் ஒரே மாதிரியான பரம்பரை அலகுகளை கொண்டிருப்பவை. அதாவது அவற்றில் வேறு பாடுகள் (*Variation*) இருப்பதில்லை. எனவே ஒரு நோய் தாக்கினால் அவை அனைத்தும் தப்பி பிழைப்பது கடினம்.



விதைகளில் உருவாகும் மரங்களில் வேறுபாடுகள் இருப்பதால் அவற்றில் சில நோய் எதிர்ப்பு சக்தியுடையவையாக இருப்பதுண்டு. எனவே அவை நோய்களின் தாக்கத்தில் இருந்து இலகுவில் தப்பிவிடும்.

அதாவது எமது பிரதேசத்தில் முள்முருங்கை அழிந்ததற்கான பிரதான காரணங்களில் மனிதர்களால் செயற்கை முறையில் மரங்கள் உருவாக்கப்பட்டதும் ஒன்று, மேலும் விதைகளில் மூலம் உருவாகும் மரங்களும் அதிகளவில் வளர்வதற்கான ஏதுநிலைகள் அங்கு காணப்படாமையும் காரணம்.

இது தொடர்பில் யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் உள்ள தாவரவியல் பிரிவினரிடம் அதிக தகவல்கள் இருக்கும் என நம்புகின்றேன். எனினும் என்னால் அவர்களிடம் இருந்து தகவல்களை பெறமுடியவில்லை.

இருந்தபோதும், வைரஸ் தாக்கத்தால் வடபகுதி முழுவதும் முள்முருங்கை மரங்கள் அழிந்தபோதும் தமிழர் கலாச்சாரத்துடன் இணைந்த இந்த மரம் நெடுந்தீவு பகுதியில் எந்தவித மனித தலையீடும் இன்றி பெரும் விருட்சமாக வளர்ந்து பூத்து குலுங்கி நிற்பதாக முகநூலில் ஒருவர் போட்ட பதிவு கடந்த மார்ச் மாதம் எனது கண்ணில்பட்டது.

அங்கு இந்த மரங்கள் நிற்பது மனதுக்கு ஆறுதலான விடயம், ஆனால் அதனை பாதுகாத்து மேலும் இனவிருத்தி செய்து வடமாகாணத்தில் மீண்டும் வளர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த முயற்சியில் யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் மற்றும் தாவரவியல் பீடம் ஆகியவற்றின் பங்களிப்பு முக்கியமானது.

இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு இனம் அழியும்போதும் நாம் எவ்வளவோ அரிய பரம்பரை மூலக்கூற்று தகவல்களை (*Gene pool*) இழந்து போகின்றோம். அதனை தடுப்பதன் மூலம் எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வை வளப்படுத்த முடியும்.

• • •